# பொதிகை

14 பெப்ருவரி மார்ச் 1993



டொலர் $1

கலை இலக்கிய மாத மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளையும் வேதாகம விதிப்படி செய்து கொள்வதற்கும்,

சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் (Hindu Priest & Registrar)

84. BERTRAND AVE. SCARBOROUGH, ONT. M1K 2S6, CANADA

Tel (416) 285-0974




Tel (416) 285-0974

கல்யாண மண்டபம், மனவறை பந்தல் அலங்காரம், முத்து மணிமாலைகள், பூமாலை, ஆண்டாள் மாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைக்குரிய பொருட்கள் இவை அனைத்தையும் ஓரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம். இவற்றுடன் குறைந்த வாடகையில் ஸ்காபரோ, ரொரன்ரோ நகரங்களில் கல்யாண மண்டபம் ஒழுங்கு செய்து தரப்படும். **திருமணத்திற்குத் தேவையான அனைத்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதிகை**
கலை இலக்கிய மாத மலர்
மனம். 1 மணம். 2
*14-02-1993 - 13-03-1993*



ஆசிரியர்.
எஸ்.ஜெகதீசன்

விளம்பர நிர்வாகம்.
ராஜா

அச்சமைப்பு.
தியாக.எஸ்.நாதன்.

வடிவமைப்பு.
சங்கர் அச்சகம்

விநியோகம்.
பாபா பப்ளிகேஷன்ஸ்

பிரசுரம்.
பொதிகை நிறுவனம்

Address :-
203 Markham Road
P.O.Box 90527
Scarborough, ONT, M1J 3C3,
CANADA.
Phone :-
Articles. (416) 429-9046
Advertisements (416) 266-4716
Fax :- (416) 264-2775

ISSN 1192 - 6779

# இனி ஒரு விதி செய்வோம் !
## அதனை எந்த நாளும் காப்போம் !!

*ஒருவர் பிறப்பால் தமிழர்; மனசால் வெள்ளையர் என யாராவது சொல்லி வைத்தால் போதும். அப்படியே உள்ள மெல்லாம் சிலிர்த்துப் போய்விடுகின்றோம். வெள்ளையர் என்று குறிப்பிட்டது நிறத்தையா இனத்தையா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கு எமக்கு அவகாசம் இருப்பதில்லை. இனத்தவர்தான் இதயத்தை ஆக்கிரமிக்கின்றார். ஏனெனில் எமது மோகம் அப்படி! ஆனால் அதே சமயம் ஒருவர் பிறப்பால் வெள்ளையர், மனசால் தமிழர் எனின் மனதில் விலாசம் தெரியாத சோகம் பரவுகின்றது. அடையாளம் தெரியாத இருட்டு வியாபிக்கின்றது. அர்த்தமில்லாத அவமானம் அப்பிக் கொள்கின்றது. ஏன் இந்த நிலை? ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெறுவது தப்பில்லை. அல்லது நேரம் தவறாமை போன்ற இதர நல்ல குணங்களைப் பின்பற்றுவதும் தவறில்லை. ஆனால் வெள்ளையர் என்றாலே உயர்ந்தவர். சிறந்தவர் எனக் கருதுவதுதான் தவறு- எமது இதயத்தை மட்டும் அப்படியே வெள்ளையரின் மோகத்தில் ஆகர்ஷிக்க விட்டு விட்டு..... எமது சிறார்கள் மட்டும் தமிழைப் புறக்கணிக்கின்றார்கள் என்று சொல்வதை எந்தவகையில் நியாயப் படுத்துவது? எனவே கலங்கிய எமது மனம்தான் முதலில் தெளிய வேண்டும். அதனால் சிறுவர்கள்தான் வெற்றியடைவார்கள். தமிழ் தோற்றுப் போய் விடவில்லை என்று சொல்லிக் கொள்வார்கள். தமிழ் தனது கௌரவ நாற்காலியை கைப் பற்றிக் கொண்டதாக சந்தோஷப் படுவார்கள்.*

*எந்த ஓர் உணர்வைப் புதைத்து வைக்கின்றோமோ அதுதான் முளைத்து விடும். ஒருவர் பிறப்பால் வெள்ளையர்; மனசால் தமிழர் என்ற நிலை ஏற்படுவதற்கு - மனசார விரும்பி வரவேற்பதற்கு எம்மையே நாம் தயார் படுத்துவோமா?*

*ஆரம்பத்தில் எதுவும் புதிதாய்த்தான் இருக்கும்; புதிராய்த்தான் இருக்கும் !!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARKET 265-1010

# ஜெமினி மார்க்கட்

MARKHAM & EGLINTON சந்திப்பில்

என்றும் எதுவும் மலிவு விலையில் !

GEMINI MARKET- VIDEO

VIDEO 261-3215

- அனைத்து இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்களுக்கு
- துரித பணமாற்றுச் சேவைகளுக்கு
- அனைத்து நகைத் தேவைகளுக்கு
- நீங்கள் விரும்பும் தமிழ், மலையாள திரைப்படங்களுக்கு
- நீங்கள் விரும்பும் சினிமாப்பாடல்களை வீடியோவிலும் ஓடியோவிலும் பெறுவதற்கு
- அனைத்து வீடியோ பிரதி மாற்றல்களுக்கு
- சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடைவகை அன்பளிப்புப் பொருட்களுக்கு

## GEMINI

3230 EGLINTON AVE.EAST
SCARBOROUGH . ONTARIO
M1J 2H6 . CANADA .

TEL : (416) 265-1010
(416) 261-3215

FAX : (416) 265-7410

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட! என்ன என்னை ஒரு மாதிரி பார்க்கிறியள். நான்தான் உங்கடை ராசுக்குட்டி அப்பா. நீட்டுக் கால்சட்டையும் சேட்டும் போட்டு இருக்கிறன் அடையாளம் தெரியேல்லையே? என்ரை மகள் வசந்தி "அப்பு கனடாவிலை இருக்கிறதெண்டா மானம்

# டொன்மில்ஸ் சிவப்பிரகாசம்

மரியாதையா இரு" எண்டு எனக்கு கால்சட்டை போட்டு விட்டிருக்கிறாள். அப்ப ஊரிலை இவளவு நாளும் நானும் என்னைப் போல உள்ளவையும் மானங்கொட்டு வேட்டி சால்வையோடை திரிஞ்சனாங்கள் எண்டு அவளின்ரை நினைப்பு பாருங்கோ.

ஊரிலை நாங்கள் எப்பிடி இருந்தனாங்கள்? எண்டு கொஞ்சமாவது நினைச்சு பார்க்கினையோ? ஏதோ வெளிநாட்டிலை இருந்தா மதிப்பும் மரியாதையும் வந்திட்டுது எண்டு ஒரு எண்ணம் கண்டியளோ. உதாரணத்துக்கு ஒண்டு சொல்லுறன்.

என்ரை மகனும் மருமகளும் ஊரிலை இருக்கேக்கைதான் முதல் பிள்ளை பிறந்தது, ஆம்பிளைப்பிள்ளை. எட சிவராசா ஆண்பிள்ளை பரம்பரையை காப்பாத்த பிறந்தது என்ரை அப்புவின்ரை பெயர் குட்டித்தம்பி, அவற்றை பெயரை ஞாபகமாக வையடா எண்டன் அவன் ஏறிக்குதிச்சான். மருமகள் காறி பனையிலை ஏறி கையை விட்டாத குறையா நாங்கள் கனடாவுக் போறம் உப்பிடி பெயரை வைச்சா அங்கை மதிப்பாங்களே எண்டு கனடாவுக்கு ஏற்ற பெயரா "சறத்" எண்டு வைச்சுக் கொண்டு வந்தினம்.

> எங்கட ராசுக்குட்டி அப்பா கனடாவிலை நிரந்தரமாகக் தங்கப் போகின்றார். என்று அப்பாட்மென்ற் தமிழ்க் கடையிலை.......காத்துவாக்கில அறிய முடிஞ்சுது.
>
> அப்ப பேந்து என்ன...... நாலு நல்ல விஷயமும் தெரிஞ்ச, சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் அவரது கருத்துக்கள் மாதா மாதம் உங்களை மகிழ்விக்க நாடிவரும் தானே.
>
> புகழ் பூத்த எழுத்தாளர் டொன்மில்ஸ் சிவப்பிரகாசம் தனக்கே உரிய பாணியில் ராசுக்குட்டி அப்பாவை தொடர்ந்து பிரதி மாதமும் உங்கள் முன் நிறுத்துவார் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். ...... ஆ-ர்


முந்தின காலம் நாங்கள் அப்பிடியே? செல்லம், பொன்னம், மயிலு எண்டு எங்கடை பழங்கால பரம்பரையிலை பெயர் வைச்சு சந்தோசப் பட்டம் இப்ப என்னடா எண்டா நானும் கனடாவிலை வந்ததற்கு பிறகு போனமாசம் என்ரை மகன் வீட்டை போயிருந்தன் மருமகளின்ரை சினேகிதப் பெட்டையும் எட்டு மாசம் போல, அவளும் புருசன்காரனும் வந்திருந்தினை மருமகன் ரி.வி.யிலை படம் போட்டார் படத்தின்ரை பெயர் "ராசுக்குட்டி" படம் ஓடிக்கொண்டிருந்தது மருமகளின்ரை சினேகிதி "இஞ்சையப்பா எங்களுக்கு பெடியன் பிறந்தா ராசுக்குட்டி எண்டு பெயர் வைப்பமே என புருசனை கேட்கவும் அவன் "இல்லையப்பா நான் அண்ணாமலை எண்டு பெயர் வைக்க இருக்கிறன் எண்டான். அவன் ரஜனி காந்தன்ரை பக்தனாம். பாத்தியளே ராசுக் குட்டியருக்கும் அண்ணாமலையருக்கும் வந்த அதிஷ்டத்தை இஞ்சை ராசுக்குட்டி எண்டா ஒரு நெளிப்பு, அண்ணாமலை எண்டா அது பழங்கால பரியாரியார் எண்டு அந்த பெயருக்கு ஒரு சுழிப்பு ஆனால் அந்த காலத்திலை அண்ணாமலை எண்டா சனம் கடவுள் எண்டு நினைச்சு வைத்தியத்துக்கு போனதுகள் அது சரி எப்பிடி போனாலும் கடைசியிலை அந்த இடத்துக்குத்தானே வரவேணும் பாருங்கோ. அது ஒருதரையும் சொல்லி குற்றமில்லை "கரைப்பார் கரைச்சால் கல்லும் கரையும்" என்றது போல நான், நீ சொன்னா ஏறாது சினிமாக்காரன் சொன்னாத்தான் நடக்கும்.

இப்ப வாற படங்களும் அப்பிடித்தான். அண்டைக்கு ஒரு படம் பார்த்தன் ஏதோ "ஆத்தா மீன் செதிலை செதுக்கினா" எண்டு எனக்கு ஞாபகமில்லை, முந்தி ஒரு படம் பார்த்தா உண்மையிலை அதை நினைச்சு நினைச்சே இருக்கலாம்.

எட நாசங்கட்டின கதையை உங்களுக்கு நான் சொல்லிக் கொண்டு நிக்கிறன் இதாலைதான் என்ரை மகள் வசந்தி என்னை ஏசுறவள் பாருங்கோ போன, போன இடத்திலை ஏதாவது சொல்லுவன் எண்டு, எனக்கும் வாய் சும்மா கிடவாது. கவுண்டன் செந்தில் நடிச்ச படம் எடுக்க எண்டு கீழே அனுப்பிவைச்சவள் இப்ப துள்ளப் போறாள். வாருங்கோ உந்த அப்பாட்மென்ற் தமிழக் கடைக்கு ஒருக்கா போட்டு வருவம். அங்கை கன விசையகாரரை சந்திக்கலாம்.

இஞ்சை பாருங்கோ நான் சொன்ன "தமிழ் அப்பாட்மென்ற்" கடை இதுதான். பார்த்தா ஊரிலை தம்பிமுத்து அண்ணன்ரை கடை ஞாபகத்துக்கு வரேல்லையே. வட்ட சங்கிலி தராசு ஒண்டுதான் குறை மற்றப்படி எல்லா ஊர் சாமான்கள் எல்லாம் வைச்சிருக்கிறாங்கள். இண்டைக்கு வெள்ளிக் கிழமை பாருங்கோ எங்கடை சனம் சினிமா

**அண்ணாமலை என்றால் ஒரு நெளிப்பு**
**ராசுக்குட்டி என்றால் ஒரு சுழிப்பு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨. நடைச் சித்திரம்.

வெறியிலை வாற நாள் போனா, ஒரு ரூபாய்க்கு ஒரு படம் எடுக்கலாம். எங்கடை சனம் வெளிநாடு வந்தாலும் ஒண்டை மட்டும் மறக்காதுகள் இஞ்சை "டொலர்" எண்டு காசுக்கு பெயர், ஆனால் ரூபா, சதம் போட்டுத்தான் பேச்சு வாக்கிலை கதைப்பினம். இதுவும் தமிழ் காக்க தானா உதவுது கண்டியளே. ஊரிலை எங்களுக்கு சந்தோசம் வந்தாலும், துக்க சமாச்சாரம் வந்தாலும் சந்திக்கு, சந்தி, வீட்டுக்கு வீடு அண்ணன்மார், மாமாமார் போத்திலை ஒளிச்சு வைச்சு ஊத்தி தந்து உற்சாக படுத்தி வைப்பினை அந்த "ஒழிச்சு குடியிலும்" ஒரு இன்பம், ஒரு திரில், அதை இஞ்சை எப்ப தொடங்கப் போறாங்களோ தெரியாது. அது இஞ்சை இல்லாதது ஒரு பெருங்குறை வெள்ளையன்ரை றெஸ்றோறன்ரிக்கு போனா இருக்க காசு, எழும்ப காசு கேட்பான் அது குடிச்சாலும் வெறி ஏறாது ஒளிச்சு குடிக்கேக்கை வாற இன்பம் அது தனிதான்.

சரி அதை விடுங்கோ உந்த V.D.O படம் ஒரு ரூபாதானே வீட்டிலை கொண்டு போய் பார்த்தா குறைந்த விலையிலை கூடிய இன்பம்தான் நானும் தமிழ்க்கடையிலை நிண்டன் எங்கடை ஊர் பெடிச்சி ஒண்டு வேலைக்கு போட்டு வரேக்கை தன்ரை பிள்ளையள் இரண்டையும் டேகெயரிலை இருந்து இழுத்துக்கொண்டு வந்தாள் இஞ்சேருங்கோ தம்பி பொங்கலுக்கு வேண்டிய சாமான்கள் தாங்கோ எண்டவ. புக்கை காச்ச என்ன போடுறவை? எண்ட கோள்வியையும் கேட்டு வைச்சா?

பக்கத்திலை மூத்தவன் பத்துவயசு இருக்கும் தாயை கேட்டான்.

வட் இஸ் மீன் புக்கை? அதுக்கு தாய்க்காறி சொன்னா. சுவீற் றைஸ்..... யூ. வில் லைக் இற்....... என்ரை வாயும் சும்மா கிடக்காது எடி பிள்ளை பொங்கல் முடிஞ்சு போச்சு இப்ப மாடு வளக்கிறியே மாட்டுப் பொங்கல் செய்யபோறியே எண்டு கேட்டன். அதுக்கு அவ அது எனக்கு தெரியும் நாங்கள் பொங்கல் அது இது எண்டு ஒண்டும் செய்யிற தில்லை அண்டைக்கு ஒரு ஆச்சி பொங்கல் புக்கை கொண்டு வந்து தந்தவ நல்லா இருந்தது அதுதான் நானும் றை பண்ணி பார்க்க போறன் எண்டா.

அது சரி நீ "றை" பண்ணு ஆனால் உன்ரை பிள்ளையளுக்கும் உதுகளை சொல்லிகுடுத்தா அதுகளும் இதெல்லாம் ஏன் செய்யினம், எண்டு நினைக்குங்கள். தமிழ் பண்பாடும் மாறாது, இல்லாட்டி ஆச்சி மாற்றை காலம் கனடாவிலை முடிய உந்த பண்டிகைகளும் முடிஞ்சு போகும் எண்டு சொன்னன்.

நோ...... நோ....... எனக்கு உந்த விசர்க்கூத்துகள் பிடிக்காது பிள்ளையள் கனேடியன் ஸ்ரைலிலை வாழட்டும் எண்டா ஓம்....... ஓம்......... பிள்ளை இஞ்சை சூரிய பொங்கல் செய்தாப் போல சூரியன் தலைகாட்டவே போறான் தெய்வங்களும் கிரகங்களும் தங்களுக்கு மதிப்பு மரியாதை குடுக்கிற இடங்களுக்குதானே போகும் இதுக்குத்தான் இந்த ஊரிலை தை மாதம் சூரியன் காலையிலை வரமாட்டன் எண்டு பிடிவாதம் பிடிக்கிறான் எண்டு நான் நினைச்சன். பெட்டைக்கு சொல்லேல்லை

தம்பி கவுண்டன் செந்தில் நடிச்ச புது படம் இருந்தா தாமோனை எண்டு கேட்டன். பெடியன் அப்பு எல்லா புது படமும் முடிஞ்சுது எண்டான்

எட இழவு இண்டைக்கு மகள் வசந்தி வீடியோ படத்துக்கு பதிலா தானே சதிராட போறாள் என்று நினைத்த படி தன் அப்பாட்மென்றை நோக்கி நடையைக் கட்டினார் ராசுக்குட்டி அப்பா.

## இதயத்தில் இடம் பிடிக்கும் பொதிகை

வடகோடும் தென்கோடும் சமநிலை பெறத் தென்தமிழ் நாட்டுப் பொதிகை மலையில் வாழ்ந்தவர் அகத்திய முனிவர். சங்கம் மருவித் தமிழ் வளர்த்த இடம் பொதிகை அங்கு தமிழ்ப் புலவர்களும் தமிழறிஞர்களும் என்றும் நிலைத்துத் தமிழ் ஆய்வில் ஈடுபட்டிருப்பர் தேமதுரத் தமிழ் மொழியின் சுவை நுகர்வோர் பொதிகையை விட்டகலார் இதனைச் சுக்கிரீவன் கூறுமாற்றால் நன்கறியலாம் இராவணன் சீதையைக் கவர்ந்து வீரமாநகரென விளங்கிய இலங்கா புரியில் சிறைவைத்தான். சீதையைத்தேட இராமன் சுக்கிரீவன்துணையை நாடினான். சுக்கிரீவன் அனுமனையும் அங்கதனயும் சீதையைத் தேடிவர வழிகூறினான். தென்திசை நோக்கிச்செல்லும் நீங்கள் தென்தமிழ் நாட்டை அண்மிப்பீர்கள் . அங்கு இடம் கன்ற பொதிகைமலை உள்ளது . அம்மலையில் அகத்திய முனிவரது தமிழ்சங்கம் உளது. அங்குத்தமிழ்ப் புலமை சான்ற புலவர்களும், தமிழ்ப்பேரறிஞர்களும் அமர்ந்து தமிழாய்வில் முற்பட்டிருப்பர். அதனால் பொதிகை செல்வோர் தமிழமுதின் சுவைமாந்தி அதனை விட்டு அகல எண்ணார். ஆகலின் அம்மலைக்கு அப்பால் நின்று அதனை வணங்கிப்பொன்திணிந்த புனல்பெருகும் பொருனை எனும் தாமிரபரணி நதியையும் கடந்து அயலே சென்றால் மகேந்திர மலையையும் தென் கடலையும் காண்பீர்கள் பொதிகை அடைந்தார் அதனைவிட்டகல எண்ணார் என நயம்படக்கூறினார். இதனை

"செந்தமிழ் நாட்டின் அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்

என்றுமவன் உறைவிடமா மாதலினால் அம்மலையை இறைஞ்சி ஏகி

பொன்திணிந்த புனல்பெருகும் பொருனை எனும் திருநதி பின்னொழிய நாகக்கன்றுவளர்தடஞ்சாரால் மகேந்திரமா

நெடுவரையும் கடலும் காண்டீர் என்ற செய்யுளால் நன்கறியலாம் எனவே பொதிகை புகுவோர் தமிழமுதின் சுவைமாந்தி இன்புறுக. வாழ்க பொதிகை வளர்க அதன் செழுமை.

ஆ. சுப்பிரமணியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தமிழா! இனிமை அறிவாய்!!

தாயகத்தில் தமிழன்னையின் அரவணைப்பில் தனிச்சுவை கண்ட நம்மவர்கள், பலர் இன்று வேற்று மண்ணின் வேறு பட்ட சூழலில் வேதனையோடு வாழ்கின்றார்கள். தமிழோடு இசை பாட கேட்டவர்கள்: தமிழ்மணம் கமழும் தென்றலில் தேன் சுவை கண்டவர்கள்: தமிழில் கற்று உரையாடி உவகையோடு உலாவித் திரிந்தவர்கள் யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதானதெங்கும் இல்லையென பெருமிதம் கொண்டிருந்தவர்கள், இன்று இங்கு கலாச்சார கட்டுக்கோப்பை மொழிபற்றை சற்று இழக வைத்தாலென்ன? என்று எண்ண தலைப்படுகிறார்கள்.

வேற்று மண்ணில் வேரூன்றுபவர்கள், ரி.வி.யின் ஆங்கில நாதத்தோடு கூடிய தரிசனத்தோடு நாளை ஆரம்பிக்கின்றார்கள் ஆலைகளில், அலுவலகங்களில், கல்லூரிகளில், நூற்றுநாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்தவர்களின் சூழலின் மத்தியில் தம்மை ஸ்தரப்படுத்த முன்னின்று உழைக்கிறார்கள். புதுக்கண்டத்தில் புது வாழ்வு காண துடிக்கு மிவ்வேளை தமிழை, தமிழ் கலாச்சாரத்தை ஆழமாய் அலசிப்பார்க்க எங்கே நேரம் இருக்கிறது என்று, மறுபக்கம் தலைவைத்து படுக்கிறார்கள்

இளம் சந்ததிகளில் பலர் புதுமையில் நாட்டம் காண்கிறார்கள். புதுமையை நாடியோடி 'நான் முந்தி நீ முந்தி என உடையில், நடையில், நடத்தையில் மாறுபட்டு வருமிவர்கள் தமிழ்ப்பண்பை பெரிதாக கணக்கெடுக்க முன்வருவதாக தெரியவில்லை. ஒரு பெண் அச்சம், மடம், நாணம் போன்ற தமிழ் பண்புகளை எண்ணிப் பார்க்கும் போது தன்னை 'நாட்டுப் புறத்தாள் என்று நம்மவர்களில் சிலரே பட்டம் கட்டி விடுவார்களோ எனப் பயப்படும் நிலையையும் சந்திக்க நேரிடுகிறது.

இத்தகைய இக்கட்டான நிலையிலும் கூட தமிழன் என்று சொல்லி, தலை நிமிர்ந்து நிற்கிறார்கள் மற்றும் சிலர். இவர்கள் தேமதுரத் தமிழோசையை உலகமெல்லாம் பரப்ப துடிக்கிறார்கள். தமிழனாய் பிறந்ததில் பெருமைப்படுகிறார்கள் தமிழின் ஆழத்தை அறிய ஆசைப்படுகிறார்கள். தமிழக் கடலில் முத்துக் குளிக்க முனைகிறார்கள். தமிழன்னையால் எமக்க பெருமையே தவிர எம்மால் தமிழன்னைக்கு பெருமை தேடித்தரும் தகுதி இல்லையென்று வீறுநடை போடுகிறார்கள். இவர்கள் தரத்தில் முன்னின்றாலும் தொகையில் பின் நிற்கிறார்கள்.

நம்உடன் பிறப்புகள் ஊனமுற்றிருக்கும் எம் தாயக மண்ணை காக்கும் கடும் முயற்சியில் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் நேசிக்கும் நம் தமிழ் பாரம்பரியத்தை பேணி காத்து வளர்த்தெடுப்பது, எம்மால் எம் இனத்திற்கு புரியும் அன்புக் காணிக்கையாய் அமைகிறது. எம்முள் மறைந்திருக்கும் கலைத்திறனை வெளிப்படுத்தி, கலைகள் வளர ஆக்கப் பணிகள் பல புரிய வேண்டும். எத்தனையோ திறன் படைத்தவர்கள் இங்கு வீணே காலத்தை கழிக்கிறார்கள். அவர்களை தட்டிக் கொடுத்து தமிழை வளர்ப்பது நம் உரிமை மட்டுமல்ல கடமையும் கூட.

மறுபக்கம் தமிழ் இலக்கியங்களுக்கு பதில் மேலைநாட்டின் மோகத்தால் மேலை நாட்டு இலக்கியங்களின் ஆழத்தை அறியும் அறிவும் திறனும் நமக்கு உண்டா? கில்டன், வேஸ்வேத், பேர்னாட்ஷோ போன்ற கலைஞானிகளின் படைப்புகளை ஆழ்ந்து அனுபவிப்பது நடைமுறையில் சாத்திய மாகுமா? கவியரசன் கம்பன், பாரதி, சோமசுந்தரப்புலவர், விபுலாநந்தர், எனப்பல கலைச்சக்கரவர்த்திகள் முதுசமாக நமக்கு தந்த சொத்துக்களை ரசிப்போம்.

நம் வயிறுகள் நம்மண்வாசனையை மறக்க மறுக்கின்றன. கறிக்கு கருவேப்பமிலை காண தமிழ் கடைகளை நாடியோடுகிறோம் கண்கள் தமிழ்ப் படங்களை காணாது உறங்க மறுக்கின்றன. இடுப்புகள் சாரத்தில் நுழைந்து தனிச்சுகம் பெற துடிக்கின்றன. இதே போல் உறங்கிக் கிடக்கும் தமிழ் இலக்கிய, மொழி பற்றும் விழித்தெழட்டும்.

தமிழ் முதுமொழிகள் மூத்தவளாய் முன்னிற்கிறாள். அவள் தமிழகத்தில் மட்டும் அடங்கிக் கிடக்கவில்லை. மத்திய கிழக்கில் தோன்றி வட இந்தியாவில் வளமாய் வளர்ந்துசீருடனும் சிறப்புடனும் இருந்திருக்கிறாள். அண்மையில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் நடத்திய ஆராய்ச்சிகளின் படி தமிழர்கள் கட்டிடக் கலையில், கால்வாய்கள் கட்டும் தொழில்நுட்பத்துறையில் பலபடி முன்னேறி இருந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

வள்ளுவன் தந்த திருக்குறள் பல்கலைக் களஞ்சியம் பாரெங்கிலும் கொடிகட்டி பறக்கிறது. ஆண்டியிலிருந்து அரசன் வரை, அகவாழ்விலிருந்து அரசியல் வரை திரட்டி காலத்தால் அழியாத திருக்குறள் நம் தமிழன்னையின் தனிப் பெரும் சொத்து பகடுகை துளைத்து ஏழ்கடலை புகுத்திய குறள் படைத்த தமிழர் வழிவந்த நாம் தமிழ் தெரியாத தமிழராய் வாழலாமா?

தமிழ் தானாய் வளரவில்லை. தமிழை தமிழர்கள் தான் வளர்த்தெடுத்திருக்கிறார்கள். பாரிமன்னன்

## சாமி அப்பாத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவேந்தருக்கு வாரி வழங்கி தமிழ் வளர்த்தான். அதிகமான் அரசன் நெடுநாள் சீரும் சிறப்புடனும் வாழ வைக்க வல்ல அதிசய நெல்லிக்கனியை தான் உண்ண மறுத்து தமிழை வளர்த்த ஔவைப் பிராட்டிக்கு வழங்கினார். அரசனிலும் உயர்ந்தவன் கலைஞன் என்று கலைஞரை கௌரவித்தார்கள் தமிழ்ப்புலவர்கள். அவர்களை கை கொடுத்து உதவினார்கள் தமிழ் பெரும் குடிமக்கள்.

தமிழ் மொழியை நேசிக்க தவறியவர்கள், தமிழ் கலாச்சாரத்தை நிந்தித்தவர்கள், பெருமையை உணரத் தவறியவர்கள், ஊட்டி வளர்க்க தயங்கியவர்கள், தமிழன்னையை படுகுழியில் தள்ளும் பாவத்திற்கு உள்ளாகிறார்கள். நம் தமிழன் பல்லாயிரமாண்டுகள் திரைகடலோடி திரவியம் தேடப் போன போதெல்லாம் ஆங்காங்கு சிரமங்கள் மத்தியில் தமிழை வளர்த்திருக்கிறான். நாலாயிரமாண்டுகளாய் நன்கு வளர்ந்த தமிழ் கனடாவில் நம் சந்ததியுடன் முடிவடையப் போகிறதா! தமிழை சிறார்க்களுக்கு எழுத வாசிக்க கற்று கொடுக்க மறுப்போமேயானால் அடுத்த சந்ததியினர் தமிழ் தெரியாத தமிழராய் தவழப் போகிறார்கள். மொழி அறியாதவர்கள். அதனுள் புதைந்திருக்கும் அறம், வீரம் விருந்தோம்பல், ஒழுக்கம் என பல பண்புகளையும் அறிய உணர தவறுகிறார்கள்.

கறுப்பர்கள் கண்டம் மாறி வந்து கலாச்சாரத்தை காற்றில் பறக்க விட்டு சொந்த மொழியை அடகு வைத்து புது வாழ்வை ஆரம்பித்தாகள் என்ன ஆயிற்று மாற்றானிடம் மண்டியிடும் நிலை. இப்பரிதாப நிலை நமது சந்ததியினருக்கம் ஏற்படுவதை தடுத்து நிறுத்துவது நமது கடமை.. இதே கனடாவில் உக்ரேனிய மக்கள் பல ஆண்டு களாய் வாழ்ந்து வருகிறர்கள். அவர்கள் இன்றும் தம் மொழியை கலாச்சாரத்தை தம்பிள்ளைகள் உள்ளத்தில் ஊன்றி இருக்கிறார்கள். நமக்கு மட்டுமேன் இந்த தயக்கம்.

அறநெறி காவலர்கள், மாமறை அந்தணர்கள், முத்தமிழ் கலைஞர்கள், செந்தமிழ் செல்வர்கள், ஆண்மையாளர்கள், நாவேந்தர்கள், எண்ணும் எழுத்தும் அறிவிக்கும் ஆசான்கள், பெற்றோர்கள் தமிழை, தமிழ் பண்பை வளர்க்க முன் வரவேண்டும் தமிழ் நூல்கள் இறக்குமதி செய்யப் படவேண்டும் தமிழ் ஆராய்ச்சிகள் நடத்த பட வேண்டும் பட்டி மன்றங்கள், கவி அரங்குகள், நாடகப் போட்டிகள். நடத்தப் பட வேண்டும் தமிழ் அறிஞர்கள் வரவழைக்கப்பட்டு அறிவுப் பசிக்கு சத்துணவு ஊட்டப் பட வேண்டும்.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாரதி கனவு கண்டான். இன்று தமிழன் உலகமெல்லாம் உருண்டோடுகிறான், வேரூன்றுகிறான், ஆனால் அங்கெல்லாம் தமிழைப் பரப்புகிறானா? சிந்திப்போம் செயல்படுவோம் வாரீர்.


ஜுபிட்டர் போட்டோ லிமிட்டெட்

மக்கள் மனதில் தாயகத்தை நினைவு கூறக் கூடிய வகையில்
நகரின் மத்தியில் உங்கள் எண்ணங்களை வண்ணப் படங்களாக
30 நிமிட நேரத்தில் பெற்றிட நாட வேண்டிய இடம்

JUPITER PHOTO Ltd.

மங்கல மங்கையரின் மங்கள மணவிழாக்களா ?
மழலைச் செல்வங்களின் பிறந்தகின விழாக்களா ?
புதுமலர்ப் பூவையினரின் பூப்புனித நீராட்டு விழாக்களா ?

மற்றும் முக்கிய வைபவங்கள், விசேட கலைநிகழ்ச்சிகள், ஒன்று கூடல்கள்,
போன்ற எதுவாயினும் உங்கள் இடங்களில் வந்து உங்கள் அழகுத் தோற்றங்களை
வண்ணப் படங்களாக்கி என்றும் பார்த்து மகிழ்ந்திட ஒரே இடம்

JUPITER PHOTO Ltd.

மேலும் சின்னஞ் சிறார்களுக்கான உடுப்பு வகைகளும்
பெண்களுக்கான சாறி, பிளவுஸ் மற்றும் உடுப்பு வகைகளும்
பெற்றுக் கொள்ளலாம்

JUPITER

PHOTO LTD

JPL

2920 Danforth Avenue
Toronto. Ontario . M4C 1M1
TEL :(416) 699-6758
FAX: (416) 699-6893


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிக்க வைக்கும் பிராவகம் நந்தகுமார்



வானளாவ உயர்ந்து நிற்கும் கட்டிடங்களைப் போல கனடாவில் வாழும் தமிழர் மத்தியில் புகழால் உயர்ந்து நிற்பவர் நந்தக்குமார். கட்டிடங்களைப் போல உறுதியான உயர்ந்த உள்ளம் படைத்த நந்தகுமார், தமிழர் மத்தியில் என்ற விபரத்திரட்டு நூலைப் போல சகலருக்கும் பிரயோசனமானவர்.

இந்த விபரத்திரட்டு கையில் இருந்தாலே போதும் கல்யாணமொன்றை சிரமமில்லாமல் நடாத்தி முடித்து விடலாம் என்ற நம்பிக்கை தமிழர் மத்தியில் ஏற்பட்டுள்ளது. - தமிழர் மத்தியால் ஏற்பட்டுள்ளது.

காலத்தில் பதிவுகள் இவரை என்றும் நினைவில் வைத்திருக்கும். விபரம் தெரிந்த இவரைப் பற்றி விபரமாக நாமும் தான் பார்ப்போமா......

## ஆர். என். லோகேந்திரலிங்கம்

ஒரு புதிய ஆண்டில் மீண்டும் நாங்கள் புகுந்திருக்கின்றோம் வழமைபோல இங்கு புத்தாண்டுக் கலண்டர்கள் புதிய வர்த்தக நிலையங்களின் தோற்றம் அது போல புதியவர்களின் வருகை, எமது தாயகத்திலிருந்து ... ஒன்று நூறு ஆயிரம் எனத் தொடங்கி இன்று பல்லாயிரக் கணக்கில் இங்கு புலம்பெயர்ந்துள்ள ஈழத்து தமிழ் மக்களாகிய எமக்கு தமிழ் வளர்த்த நிலையங்களின் தேவை அவசியமான ஒன்றாகத் தோன்றி எமது வாழ்வோடு ஒன்றிவிட்டது. அதுபோலத்தான் ஏனைய சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் ஏற்றுமதி இறக்குமதி நடடிவடிக்கைகள் இன்னும் பல.

புத்தாண்டில் அனைத்தையும் காண்கின்றோம். ஆனால் ஏதோ ஒன்று குறைவதுபோல ஓர் ஏக்கம் அதன் அவசியம் பல சந்தர்ப்பங்களில் எமக்கு உணர்த்தப்படுகின்றது. வீட்டிலிருக்கும்போது எந்தத்தேவைக்குமே வீட்டுப் பெண்மணிகள் கூட "தமிழர் மத்தியில் எங்கே?" என்று ஆவலாய் பறக்கின்ற அந்த வருடாந்த தமிழர் குறிப்பேடு இம்முறை எமது கைகளில் இன்னும் தவழ்ந்து விடாத அந்த ஏக்கம் எமக்கு புரிகின்றது. 1990 ம் ஆண்டு தொடக்கம் வெளிவரத் தொடங்கிய அந்த விபரத்திரட்டு வருடந்தோறும் பாராட்டத்தக்க முறையில் வெளிவருவதும் அதன் ஒவ்வொரு இதழ்களிலும் வளர்ச்சியின் தன்மை பளிச்சிடுவதும் எவராலும் மறுதலிக்க முடியாத உண்மை. இம் முறையும் அவ்வாறான ஒரு புதிய மாற்றத்தை "தமிழர் மத்தியில்" வெளியீட்டில் எதிர்பார்த்திருந்த எமக்கு திடீரென்று ஒரு "அறிவிப்பு" கிட்டுகின்றது.

"தமிழர் மத்தியில் 1993 வெளிவந்துவிட்டது. அனைத்து தமிழர் வர்த்தக நிலையங்களிலும் அது இலவசமாக விநியோகிக்கப் படுகின்றது.தமிழர் மத்தியில் என்றால் நந்தகுமார். நந்தகுமார் என்றால் " தமிழர் மத்தியில்" இங்குள்ள அனைத்து தமிழ்மக்கள் மனதிலும் இந்த இரண்டு நாமங்களும் ஒரே கணத்தில் தோன்றிமறைவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

சிலருக்கு நந்தகுமாரை ஒரு கட்டடக்கலைஞர்

என மாத்திரம் தெரியும் இன்னும் சிலர் அவர் ஒரு நாடகக் கலைஞர் என்பதையும் அறிவர். இதற்கு மேலாக அவரது ஆளுமைகள் புலமைகள் கடந்த கால செயற்பாடுகள் அநுபவங்கள் எல்லாமே சேர்ந்ததுதான் " தமிழர் மத்தியில் என்ற அந்தக் குறிப்பேட்டை எமக்கு வருடம் தோறும் வழங்கிவருகின்றன என்பதும் முக்கியமானதொன்றாகும். அந்த அறிவிப்பு வந்ததும் அருகில் உள்ள தமிழ் வர்த்தக நிலையமொன்றுக்கு விரைகின்றோம். அங்கே வழமைபோல பத்திரிகைகள் சஞ்சிகைகள் விற்கும் பகுதியை எமது கண்கள் மேய்கின்றன. எமது ஏக்கப்பார்வையை உணர்த்த உரிமையாளரான அதன் காரணத்தைக் கேட்கின்றார்.

அடுத்த நிமிடமே அந்த அடிப்பெட்டியில் இருந்த அழகிய நூல் ஒன்றை எடுத்து எமக்குத் தருகின்றார். எமது கைகளில் ஒரு நிறை தெரிகின்றது. அட்டைப்படத்தை ஆவலோடு நோக்குகின்றன எமது கண்கள் ஒரு பார்வை எனினும் ஆயிரம் அர்த்தங்கள் தெரியும். அந்த அட்டையின் அழகு.... உட்பக்கங்களை புரட்டிப்பார்க்க எம்மை மறக்கச் செய்கின்றது "இந்த முறை நல்லா அமைஞ்சிருக்கு" ஆனபடியால்தான் கவனமா வைச்சு ஒவ்வொருதருக்கும் குடுக்கின்றோம்.

இது கடைக்காரரின் விளம்பரம். விளம்பரங்களின் தொகுப்பு ஒன்றுக்கு விளம்பரதாரரின் விளக்கமிது. அவரது கூற்றில் நூற்றுக்கு நூறுவீதம் உண்மையிருக்கிறது என்பதை உணர்ந்தபடி வெளியேவருகின்றோம் .

"1993 தமிழர் மத்தியில்" அனைத்து பக்கங்களும் எமது விரல்களால் புரட்டப்பட புதிய பல விபரங்கள் இம்முறை இணைக்கப்பட்டிருப்பதை நாம் தெரிந்து கொள்கின்றோம். தொகுப்பிற்கு மனதிற்குள் "சபாஷ்" ஒன்று அளிக்கின்றோம். எனினும் இன்னுமொருவிடயம் எமக்கு முக்கியமானதாகத் தோன்றுகின்றது அதன் வெளியீட்டாளர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கும் ஒரு "சபாஷ்" வழங்க எம் மனம் துடிக்கிறது.

தொலைபேசியில் நந்தகுமாரை தொடர்புகொண்டு எமது எண்ணம் பற்றித்தெரிவிக்கின்றோம். தனது "குழாத்துடன்" இருப்பதாகவும் அதாவது தமிழர் மத்தியில் வெளியீட்டில் அவரோடு இணைந்து செயலாற்றில் ஏனைய நண்பர்களும் அங்கு தன்னோடு இருப்பதாகவும் அவசரமான அலுவல் ஒன்றை தாம் கவனிக்க இருந்தாலும் எம்மை உடனே வரும்படி அழைப்பு விடுகின்றார்.

நாம் முன்னர் குறிப்பிட்டது போல 1990 ம் ஆண்டு முதலாவது தமிழர் மத்தியில் இதழை சிறியளவில் வெளியிட்ட நந்தகுமார் இந்த நான்காவது வெளியீட்டில் தனது திறமைகள் அனைத்தையும் முத்திரையிட்டு காட்டியிருக்கின்றார் போலும். இந்த நான்கு வருடகாலத்தில் இங்குள்ள வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கைகளில் உண்டான பெருக்கம், தமிழர்களின் சமூக பொருளாதார கலை கலாச்சார அமைப்புகளின் செயற்பாடுகள் அத்துடன் எமது மக்களின் அதிகரிப்பு அவர்களுடைய "தேவைகளின்" வெளிப்பாடு அத்துடன் கட்டடக்கலைஞரும் சிறந்த செய லூக்கமுள்ளவருமான நந்தகுமாரின் இயல்பான ஆளுமைகள் இவைதான் இம்முறை வெளிவந்திருக்கும். "தமிழர் மத்தியில்" இதழை பூரணமானதொன்றாக வெளியிடச் செய்திருக்கின்றன.

தனது அலுவலகத்தில் ஏனைய சில தமிழ் அன்பர்களோடு காணப்பட்ட நந்தகுமார் எழுந்து வந்து எம்மை வரவேற்று உள்ளே அழைத்துச் செல்கின்றார்.

அழகிய அந்த அறையினுள் இரண்டு கொம்பியூட்டர்கள். ஏனைய வரைபடக்கருவிகள் அனைத்துக்கும் மத்தியில் நாம் அமர்ந்திருக்கின்றோம். பாலேந்திரா, கலாமோகன், குணராஜன் சிவகுமார் லோகநாதன் யோகநாதன் என தமிழர் மத்தியில் சகாக்களை எமக்கு அறிமுகம் செய்கின்றார் நந்தகுமார்.

இங்குள்ள தமிழர் வர்த்தக நிலையங்களின் விளம்பரங்களைச் சேகரித்து இன்னும் தமிழர்கள் தொடர்பான சில விபரங்களைத்திரட்டி அச்சகமொன்றில் ஒப்படைத்தால் அது ஒரு புத்தகமாக வெளிவந்து இங்குள்ள தமிழ்மக்கள் கைகளில் இலவசமாக அது தவழும் அது ஒரு சாதாரணமான செயற்பாடு.(ஆனால் "தமிழர் மத்தியில்" வெளியிடப்படும் முறையே வேறுவகையானது அதன் ஒவ்வொரு அம்சங்களும் நந்தகுமார் குழுவினரின் நேரடிக் கவனிப்பில் இடம் பெறுகின்றன. விளம்பரம் சேகரித்தல் தொடங்கி கடைகளுக்கு விநியோகித்தல் வரையும் உள்ள வழமையான செயற்பாடுகளில் அவர்கள் பங்கெடுத்தது அதைவிட இங்குகுறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது என்னவென்றால் "தமிழர் மத்தியில்" அச்சுவேலைகள் தொடர்பான தயாரிப்பு வேலைகள் அதன் அட்டைப்படத்தின் வடிவமைப்பு இவையெல்லாம் நந்தகுமாரின் அறைக்குள்ளேயே நிகழ்ந்த அதிசயிக்கத்தக்க உண்மை நந்தகுமாரின் துணைவியார் வசந்தாகௌரியும் ஒரு கட்டடக்கலைஞர். அவர்கூட இவர்களில் ஒருவராக இருந்து இவ்வருட வெளியீட்டுக்கு பல வகைகளில் பங்கெடுத்துள்ளார். அத்துடன் நந்தகுமாரின் மைத்துனர் பாலேந்திரா. இவர் மொன்றியலில் இருந்து செயற்படுகின்ற ஒரு கட்டடக்கலைஞர் தான். அவர்தான் இவ்வருட வெளியீட்டின் அட்டைப்படத்திற்கான அத்திவாரத்தை அமைத்தார் என்பதை நாம் தெரிந்துகொண்ட போது நாம் ஒரு உண்மையையும் உள்வாங்கிக் கொண்டோம்.

திறமைகள் பலவற்றை தமதாக்கிக் கொண்டிருக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் குழுவொன்றின் கூட்டுத்தயாரிப்பு தான் இந்த "தமிழர் மத்தியில்"

1976 ம் ஆண்டு தொடக்கம் 1979 வரை கட்டுப்பத்தை பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் பட்டம் பெறுவதற்காக படித்துக் கொண்டிருந்த நந்தகுமார் அங்கு வெளிவந்த "நுட்பம்" என்ற வருடாந்த சஞ்சிகை வெளியீட்டிலும் பங்கெடுத்துள்ளார் அத்துடன் அக்காலத்தில் பிரபல்யமடைந்திருந்த நாடகக் கலைஞரும் பொறியியலாளருமான பாலேந்திராவின் நாடகங்களிலும் நந்தகுமார் பங்கெடுக்கத் தவறவில்லை. "நட்சத்திர வாசிகள் ." என்ற பாலேந்திராவின் நாடகம் தமிழ் ரசிகர்கள் இன்னும் மறந்துவிடாத ஒன்று. அதில் நடித்தவர்களில் நந்தகுமாரும் ஒருவர் என்பதை அறிந்தபோது நாம் ஆச்சரியப் படவில்லை ஒரு நாடகக்கலைஞருக்குரிய தோற்றம் அவரில் தெளிவாகத் தெரிவது அதற்கு காரணமாகத் தோன்றியது.

தமிழர் மத்தியில் தயாரிப்பு தொடர்பான வேலைகளால் அந்த அறை முழுவதும் "ஒழுங்கு" சிதைந்து இருந்ததாகவும் இப்போதுதான் ஒவ்வொன்றாக தாங்கள் ஒழுங்கு . படுத்திவருவதாகவும் நந்தகுமார் தெரிவிக்கின்றார். பக்கவடிவமைப்பு வேலைகள் ஓவியங்களை விளம்பரங்களோடு இணைத்தல் அத்துடன் பெரும்பகுதி தமிழ் எழுத்தமைப்பு வேலைகள் Type setting அனைத்துமே அந்த அறைக்குள் அடங்கியிருந்தன என்ற உண்மையை நந்தகுமார் எம்மிடம் கூறியபோது நாம் ஆச்சரியப்பட்டோம்.



பல்துறை வல்லவரான நந்தகுமார் உற்சாக முள்ளவராக காணப்படுகின்றார் உரையாடல் களுக்கிடையில் நகைச்சுவை உணர்வு ததும்ப கதைப்பது அவரது இயல்புகளில் ஒன்றெனத் தெரிந்து கொண்டோம்.

ஓர் இனமானது உலகின் எந்தப்பகுதியில் சென்று குடியேறினாலும் அங்கு அந்த இனம் வர்த்தகத் துறையில் காலூன்ற வேண்டும் அப்போதுதான் அவ்வினம் பொருளாதாரத்துறையிலும். முன்னேறலாம் எனவே தான் தமிழ்மக்கள் இங்கு வர்த்தகதுறையில் உறுதியான ஈடுபாடு கொள்ளவேண்டும் என்பதை நான் உணர்கின்றேன். அதன் வெளிப்பாடுதான் இந்த "தமிழர் மத்தியில்" இவ்வகையான வருடாந்த குறிப்பேட்டை வெளயிடவேண்டிய அவசியம் ஆவல் தங்களுக்கு எப்போது உருவானது என நாம் நந்தகுமாரை வினாவியபோதுதான் மேற்கண்ட பதிலைத்தந்தார் அவர்.

தமிழர் மத்தியில் உள்பக்கங்களில் காணப்பட்ட வாழ்த்துச் செய்திகளை நான் தட்டிப் பார்த்துக் கொண்டிருந்த போது தமிழர் வர்த்தக சம்மளனத்தின் செய்தி அங்கு காணப்பட்டது எமது கண்களில் படுகின்றது. இங்குள்ள தமிழ் வர்த்தகதுறை தொடர்பான முக்கிய ஸ்தாபானமான அதுபற்றி நந்தகுமாரிடம் நாம் வினாவுகின்றோம். ஒரு அர்த்தமுள்ள "சிரிப்பு" அவர் முகத்தில் நிழலாட அதன் அர்த்தத்தை நாம் தெரிந்து கொண்டோம் இங்கு கனடாவில் ஒவ்வொரு பொது ஸ்தாபனங்களின் செயற்பாடுகளையும் அவர்களது நடவடிக்கைகள் மூலமாக நாம் அறிந்து கொள்கின்றோம். அதுபோல இந்த தமிழர் வர்த்தக சம்மேளனம். " என்ன பங்கு வகிக்கின்றது என்பது பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என அங்குள்ளவர்கள் கருத்துப் பரிமாறியதில் "உண்மை ." இருப்பதை உணர்ந்து கொண்டோம்..

கொழும்பு றோயல கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியை மேற்கொண்ட நந்தகுமாரின் பிறப்பிடம் யாழ்பாணம் வரமராட்சிப்பிரிவு. கட்டுப்பத்தை பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறி கட்டடக் கலைஞராக பணியாற்றத் தொடங்கியவர். மத்தியகிழக்கு நாடொன்றில் பணியாற்றி பிரபல்யமான ஒரு இஸ்லாமிய மசூதியை வடிவமைத்து நிர்மாணப் பொறுப்புகளை ஏற்று திறம்பட நிறைவேற்றியது. அவரின் தொழிற்துறை சாதனையாகும்.

இன்னொரு வகையான ஒரு பொது வாழ்வு நந்தகுமாரைப் பின்னிப் பிணைந்தது. பம்பலப்பிட்டியில் வாழ்ந்து வந்த நந்தகுமார் குடும்பத்தினர் அவ்வப்போது கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் ஏற்படும் இனக் கலவரங்களின் போது பல தமிழ் மக்களை காப்பாற்றியவர்கள். சிங்கள மக்களின் "நண்பர்களை" தமது பக்கம் இணைத்துக் கொண்டு தாக்கவருகின்ற காடையர்களை விரட்டியடித்த அவரது "தந்திரங்கள் பற்றிய கதைகளை இங்கு பக்கம் பக்கமாக எழுதலாம் பம்பா நந்தா என்றால் பம்பலப்பிட்டியில் சிங்கள மக்கள் கூட மதித்து நடக்கும் ஒருவராக அப்போது இருந்தவர் இந்த "தமிழர் மத்தியில்" நந்தகுமார்.

இங்கும் கனடாவில் வர்த்தக முயற்சிகளினுள் காலூன்றும் எண்ணம் உள்ள நந்தகுமார் எதிர்வரும் ஆண்டில் உலகமெங்கும் தமிழர்கள் பரந்து வாழும் ஏனைய நாடுகளிலும் தமிழர் மத்தியில் இதழை ஒரே சந்தர்ப்பத்தில் வெளியிடும் எண்ணத்தை கொண்டு உள்ளதாக தெரிவிக்கின்றார்.

ஐந்தாவது தமிழர் மத்தியில் இன்னும் அதிக பக்கங்களோடும் புதிய விபரத்திரட்டுகளோடும் வெளிவர இங்குள்ள தமிழர் வர்த்தகர்கள், கலைகலாச்சார நடவடிக்கைகள் முன்னேறி வருகின்றன என நம்பிக்கை தெரிவித்த அந்த புத்திஜீவித்தனமான குழுவினரிடமிருந்து நாம் விடைபெறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் 9வருட அனுபவமுள்ள

# யாழ் கேக் ஹவுஸ்



விழாவுக்கு மெருகையும் சுவையையும் ஊட்டும் சைவக் கேக்(முட்டை சேராத கேக்) அசைவைக் கேக், சைவ றிச் கேக் மற்றும் கேக் வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டியது ..............

## யாழ் கேக் ஹவுஸ்

திருமதி. சந்திரா தம்பிராஜா

**Tel:(416) 266-4716**



கரத்தின் சின்னம்

# SOUTHPORT

## சவுத்போட் பிக்சர் பிறேமிங் ஸ்தாபனம்

* உங்கள் சகலவிதமான படங்கள், சான்றிதழ்கள் பிறேம் செய்தல்
* திருமணப் படங்கள் பிறேம் செய்வதில் அனுபவம் மிக்கவர்கள்

* வாடிக்கையாளரின் நன்மை கருதி புதிய சேவையாக உங்களுக்கு அருகில் உள்ள நகரின் பிரபல வர்த்தக நிலையங்களில் படங்களை ஒப்படைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் **பரா**

தொலைபேசி இல.

**(416) 693 - 1298**

3096 Danforth Ave., Unit 2C
Scarborough, Ont. M1L 1C5
(Near at Victoria Park Subway)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை தேடும் வினாக்கள்

## எம். ஏ. லோரன்ஸ்

"மிஸ்டர் சிவா..... இருக்கிறாரோ? நான் அவரின் பிரண்ட் சேகர்" அறிமுகப் படுத்திக் கொண்டான் புதியவன்.

"குளிக்கிறார்.... உள்ளே வந்து உட்காருங்க.... " வரச் சொல்கின்றேன்.........

சிட்டிங்றூமில் கிடந்த சோபாவைக் காட்டிவிட்டுவாஷ்றூமை நோக்கிப் போனாள்.

"என்னங்க...... உங்க பிரண்ட் சேகர் வந்திருக்கின்றார். கொஞ்சம் கெதியாய் வாங்க...... " வாஷ்றூம் கதவைத் தட்டினாள்.

தலையைத் துவட்டியவாறே வரவேற்பறையில் பிரவேசித்தான் சிவா.

"வாடா.....
இப்பதான் என் ஞாபகம் வந்ததா?" மகிழ்ச்சியோடு தன் நண்பனின் தோள்களைத் தட்டி விசாரித்தான்.

"வெரி ஸாரிடா சிவா?"

"என்ன ஸாரி" எனக்குக் கல்யாணம் முடிந்து ஆறு மாதமாச்சு. ஸாரி சொல்லிவிட்டால் சரியாகுமா?"

"உன் குழந்தைக்குப் பெயர் வைக்க நீங்க எல்லாரும் திண்டாடும் பொழுது நான் வந்துதான் நல்ல பெயராக வைக்க வேண்டி வரும் என்றுதான் நினைத்தேன். அதனாலே............ இப்வே நான் வந்தது அட்வான்ஸாகத்தான் படுகுது....."

சிவா சிரிக்கத் தொடங்கி....... சுபா வந்து முடித்து வைத்தாள்.

"சாப்பாடு ரெடி....... வாங்க சாப்பிடலாம்" சொல்லிக் கொண்டே டைனிங் டேபிளுக்கு விரைந்தாள்.

"கம்மான்....... சாப்பிட்டு விட்டுக் கதைப்பம்......" என்று சேகரை அழைத்துக் கொண்டு எழுந்தான் சிவா.

டைனிங் டேபிளில் இருவரும் எதிரெதிராக அமர்ந்தனர். சுபா பரிமாறினாள்.

சுபா என்னோட நண்பர்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தவன் சேகர். இப்ப மொன்றியலிலிருந்து வந்தாலும். .... எப்போ எங்கே இருப்பான் என்கின்றது அவனுக்கே தெரியாத விஷயம்." சொல்லிச் சிரித்தவாறே சிவா சுவைத்துச் சாப்பிட்டான்.

சாப்பாடு முடிந்து சிட்டிங் றூமுக்குத் திரும்பிய நண்பர்கள் இருவரும் நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சேகர் விடை எழுந்தபோது....." சாப்பாடு எப்படி?" என்றான் சிவா. நண்பன் சேகர் பாராட்டுவதை சுபா நேரடியாக கேட்க வேண்டும் என்பது சிவாவின் விருப்பம்.

ஏனோ...... இந்தக் கேள்வியை எதிர்பாராத சேகர். ..... தன்நிலை இழந்தான். பின்னர் சுதாகரித்துக் கொண்டு. "உண்மையைச் சொல்லட்டுமா? எனக்குப் பொய் சொல்ல முடியவில்லை.... ஏதோ வயித்துக்குச் சாப்பிடலாம்..... அவ்வளவுதான்.... ." சலபமாகக் கூறிவிட்டான் சேகர்.

சுபாவை விட சிவாவுக்கு வேதனையாக இருந்தது.

அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வாசற்பக்கம் வந்த சேகர், "உன் மனைவியின் சமையல் அற்புதம். என்னுடைய அம்மாவின் சாப்பாட்டுக்குப் பின்பு இன்றுதான் அறுசுவையையும் என்னுடைய நாக்குச் சந்தித்துள்ளது. நீ கொடுத்து வைச்சவனடா. சிவா" நான் வேணும் என்றுதான் பொய் சொன்னேன்.." என்று சிவாவின் காதுகளுக்கு மட்டும் கேட்கும் படி கிசுகிசுத்தான்.

"இதை ஏண்டா சுபாவிற்குக் கேட்கும்படி சொல்லவில்லை. அவளுக்கும் சந்தோஷமாக இருந்திருக்குமல்லவா?"


"உன் மனைவியின் சமையல் பிடிக்காமல், நல்லாயில்லை என்று எப்பவாவது நீ சிலவேளை சொல்லியிருப்பாய். அவங்களும் இன்னும் நல்லாகச் சமைக்க ட்ரை பண்ணலாம். இந்த நேரத்தில....... நான் ஆகா...... ஓகோ... ன்னு பாராட்டினால்...... உன் மேலே அவங்களுக்கு வெறுப்புத்தான் வரும். அல்லது சிலவேளை... உனக்குப் பிடிச்சிருந்து...... நீயும் பாராட்டியிருக்கலாம். அதையே நானும் சொன்னால் நன்றாக இருக்காது. நன்றாக இல்லை என்று நான் சொன்னால்...... அவங்களுக்கு நம்ம புருஷன் நல்லா இல்லாததைக் கூட எவ்வளவு ரசிச்சுச் சாப்பிடுறார்" என்று உன்மேலே பாசம் கூடும். எப்படிப் பார்த்தாலும் நான் அப்படிச் சொன்னதுதான் சரியாகப் படுகுது....."

தன் இங்கிதமான நண்பனைப் பார்த்து கண்கலங்கினான் சிவா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் தினம்



கனடாவில் கடும் சிவப்பு றோஜாப்பூக்கள் அதிக அளவில் விற்பனையாகும் நாள் எது தெரியுமா? அதுதான் காதலர்கள் தினம். ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 14ம் திகதி காதலர்தினமாக மகிழ்வுடன் கொண்டாடப்படுகின்றது. பெப் 14ல் டெலிவரி செய்யவென, சுமார் மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பாகவே சிவப்பு றோஜாக்களுக்கான ஓடர்கள் பூக்கடைகள் மீது "மொய்க்க" ஆரம்பித்துவிடும் என்றால் காதலர் தினத்தின் மகிமையை எண்ணிப் பாருங்கள்.

காதலர் தினம் St. Valentine's day என அழைக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் ஐரோப்பிய நாடுகளில் "விசேடமாக"லண்டன்"ரோம்"பாரிஸ் ஆகிய நகரங்களில் கொண்டாடப்பட்டு வந்த இந்தத்தினமானது தற்பொழுது கனடா அமெரிக்காவையும் மோகம் கொள்ள வைத்துள்ளது. ஒருவர் மீது ஒருவர் "கண்" வைத்திருந்தால் இத்தினத்தில் தமது காதலை வெளிப்படுத்துவர். பின்னர் அது வெற்றியாக நிறைவேறும் என்பதும் ஓர் ஐதீகம்.

Saint. Valentine என்னும் பாதிரியார் கி.பி.300 ஆண்டில் ரோமாபுரியில் வாழ்ந்தவர். இவர் ஒரு வைத்தியராகவும் திகழ்ந்தார். மக்கள் மீது அளவற்ற அன்பு செலுத்தினார். இதனால் கவரப்பட்ட மக்கள் தம்மீது யார் அளவற்ற அன்பைச் சொரிந்தாலும் அவரை Valentine என்றே அழைக்கவும் மதிக்கவும் ஆரம்பித்தனர்.



சிவப்புறோஜாக்கள் இருதய வடிவிலான சாக்கலெட் போன்றன காதலின் அடையாளச் சின்னமாக காதலர்களால் அன்று தொட்டு இன்று வரை பரஸ்பரம் பரிமாறப் படுகின்றன. பொதிகை இரண்டாவது இதழ் மலரும் தினமான பெப் 14. காதலர் தினமாகும்.

***ஏ. ஆனந்தவேல்.***



## தர்ஷனா ஸ்ரோர்ஸ்

பல் பொருள் அங்காடி

தரமான இலங்கை,இந்திய,கனேடிய உணவுப் பொருட்கள் மரக்கறி,பழவகைகள்,
பால்,உடன் ஆட்டிறைச்சி,கோழி இறைச்சி,மீன் மற்றும் வெகுமதிப் பொருட்கள்,
வீடியோ படங்கள்,பத்திரிகைகள்,சஞ்சிகைகள்,**CD/Audio**
இவைகள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.



## THARSHANA STORES

**103A DUNDAS ST EAST**
**MISSISSAUGA,ONTARIO,L5A 1W7**
**TEL:(416)270-7576**



# மலிவு !! தரம் !! குணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தி எழுதிய தீர்ப்பு......

## ஏ. எச்.எம் ரஹீம்

**காலை எட்டுமணி**

"என்னங்க..... எழுந்திருங்க...... மணி எட்டாகுது" என்று கூறியவாறு தனது கணவனை எழுப்பினாள் சாந்தி.

"ச்சே" ஞாயிற்றுக் கிழமை... லீவு...... இன்றைக்காவது நிம்மதியாய்...... ஒரு மணிநேரம் சேர்ந்து படுப்போம் எண்டால் விடமாட்டியே....." என்று முனகியவாறு எழுந்தான் மதன் "நான் தான் குழந்தையை தினம் தினம் கவனிக்கின்றேனே.... இன்று ஒரு நாளாவது நீங்க கொஞ்சம் தூக்கி வைச்சிருக்கக் கூடாதா" என்று அழுது கொண்டிருந்த குழந்தையை அங்கேயே கொடுத்து விட்டுப் போனாள்.

குழந்தையை சமாதானப் படுத்த அதற்கு ஒரு முத்தம் கொடுத்தான் மதன். உடனே அதன் அழுகை தீவிரமானது" இப்போதுதான் புரிந்தது மதனுக்கு. ... தான் பல் விளக்காததினால் வரும் "ஸ்மெல்." குழந்தை நித்தியாவுக்கு பிடிக்க வில்லை என்று.

" ஏய் அங்க என்ன செய்கிறாய்?"

"இருங்க... வீடியோவில ஒரு தமிழ்ப்படம் பார்த்த அரைவாசி"

"அதுசரி"... இப்ப குழந்தையை விட உனக்குத் தமிழ்ப்படம் முக்கியமாகப் போச்சோ? என்னமோ செய்......" என்று கூறியவாறு நித்தியாவை கீழே போட்டு விட்டு வாஷ்றூமுக்குள் நுழைந்தான்.

**காலை பத்து மணி**

> இப்ப குழந்தையை விட உனக்கு தமிழ் படம் முக்கியமாப் போச்சு

டிப்டாப்பாக டிரஸ் செய்து கொண்டு கிளம்பிய கணவனை எங்கே போறீங்க என்ற கேப்பாங்களோ? நீதான் வித்தியாசமானளவளா வந்து வாச்சிருக்கிறியே" இதுவும் கேட்பே... இன்னமும் கேட்பே.... நான் இப்ப பிரண்ட் ஒருத்தனைப் பார்க்கப் போறன். என்ன விஷயம்?"

"நித்தியா கக்கா இருந்திட்டாள்.. கொஞ்சம் பிடிங்க. .." என்றாள் சாந்தி.

" என்ன நீ... காலையில நான் எழுந்த உடனே நித்தியாவைக் கொடுத்தே. இப்ப என்னடான்னா. வெளியில போகும் போதுமா? இனிமே ஞாயிற்றுக் கிழமையும் ஏதாவது வேலைக்குப் போய் விட வேண்டும். ஊர்ல நீ ஒருத்திதான் குழந்தை பெற்றனியா? என்னமோ. . பெரிய பாரத்தைச் சுமக்கிற மாதிரி. என்னையும் கூட சேர்த்துக்கிறாய்..." என்று கத்தினான் மதன்.

நித்தியா, மதனின் உடுப்பிலும் அசிங்கம் செய்துவிட்டாள்.

"போச்சு... போச்சு.... எல்லாம் போச்சு... இன்னிக்காவது சுரேஷ்ஷைப் பார்க்கலாம் என்று இருந்தேன். முடியாமற் போச்சே.

**பகல் பன்னிரண்டு மணி**

"இன்றைக்கு என்ன சாப்பாடு?"

"ம்... நேற்றையில் சோறும் கறியும் இருக்கு..... மைக்குர வேவ்வில சூடு காட்டி சாப்பிடுங்கோ..."

> அவள் மேலிந்த கோபத்தால் நித்தியாவைக் கிள்ளிவிட்டு காதை மூடிக்கொண்டான்

"என்ன நினைச்சிட்டிருக்கே நீ?... புருஷன் ஒருநாள் வீட்டில இருக்கானே.. அவனுக்கு வாய்க்கு ருசியாக சமைச்சுக் கொட்டுவம் என்ற நினைப்பு வேண்டாம்"

"ம்... நான் இங்கை காலையில இருந்து பார்க்கிற வேலை எனக்குத் தெரியும்""

"என்ன பெரிய வேலை செஞ்சே? காலையில இருந்து நித்தியாவைக் கூட நான்தான் பார்த்துக் கிட்டே இருக்கிறேன்?" சொல்லிக் கொண்டே மைக்குரவேவில் சாப்பாட்டைச் சூடு காட்டினான்.

சாப்பாட்டை ஆரம்பித்து சில நேரத்தில் எங்கிருந்தோ ஓடி வந்த நித்தியா சாப்பாட்டுக் கோப்பைக்குள் தண்ணீரை ஊற்றி விடுகின்றது.

"அட... உன்னை இஞ்சை வைச்சிருக்கிறதுக்கு எங்கையாவது கொண்டு போய் விட்டு விட்டு வந்துடலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த அடியால் துடித்த குழந்தையை தூக்கிக் கொண்டு போனாள் சாந்தி".

## மதியம் இரண்டு மணி

"சாந்தி... இங்கே வாடி" நித்தியா என்னோடை ஆபிஸ் பைல்ல இருக்கிற பேப்பரை எல்லாம் கிழிச்சிட்டு இருக்கா....." என்று அலறினான் மதன்.

"நான் என்ன சும்மாவா இருக்கேன்? இங்கே உங்களது உடுப்புகளைத்தானே கூஷஅயன் பண்ணிக்கிட்டிருக்கேன். ஏதோ கொஞ்ச நேரம் குழந்தையைப் பார்த்துக்க முடியாதா?"

அவள் மேலிருந்த கோபத்தில் நித்தியாவைக் கிள்ளிவிட்டு, அவள் போட்ட சத்தத்தில் காதை மூடிக் கொண்டான்.

## மாலை ஆறுமணி.

டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்த மதனைச் சத்தம் போட்டுக் குழப்பியது குழந்தை.

"எதிர் வீட்டுக் குழந்தையைப் பாருடி". எப்ப பார்த்தாலும் அமைதியா அவங்க அம்மா மடியில படுத்திட்டிருக்கு.."

நீங்க குழந்தையைச் சொல்லிறீங்களா... அதனுடைய குழப்படியை அவங்க வீட்டில தான் கேட்கணும் அவங்க அப்பா எவ்வளவு நல்லவர்.... குழந்தையை எவ்வளவு அன்பாகப் பார்த்துக்கிறார். நீங்களும்தான் இருக்கீங்களே?"

"போச்சுடா" ச்சே.. டெலிவிஷன் பார்க்கிற, மூட் அவுட் ஆக்கிட்டியே" உன்னால குழந்தை நித்தியாவை வளர்க்க முடியாது என்றால் சொல்லிவிடு எங்கேயாவது குழந்தைகள் விடுதியில் போய் சேர்த்து விடுகிறன். எப்பப் பாரு ஒரே தொல்லையாக இருக்கு..." கத்தினான் மதன்.

## இரவு எட்டுமணி

"சாந்தி.. நான் கோபமா பேசினேன்னு என்மேலே கோபமா? எல்லாம் இந்த நித்தியாவாலதான். இதோ பாரு... இதையெல்லாம் மனசுல வைச்சுக்காதே... குடும்பத்துல.. அப்பப்போ இதெல்லாம் வந்தாத்தான் மகிழ்ச்சியாக இருக்கும் என்று படிக்கிறகாலத்தில் பல்கலைக்கழகத்தில் சொன்னாங்க.

"பொய் சொல்லாதீங்க. பல்கலைக் கழகப் பக்கமே நீங்க போகலியே.... ஜீ.சீ.ஈ. கூட எத்தனைதரம் எடுத்துப் பாஸ் பண்ணினீங்க""

"சரி... சரி.. ஏதோ தெரியாத்தனமாகச் சொல்லிவிட்டேன்" மனைவியின் கோபத்தை மாற்றும் முயற்சியில் சிறிது சிறிதாக வெற்றி பெற்றுக் கொண்டிருந்தான் மதன்"

## இரவு பத்து மணி

தனக்கு இன்னுமொரு நித்யாவை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான் மதன்.

*** பல்லு தெரிஞ்சா பாதகமில்லை. **

நேற்று உங்க வீட்டுக்கு ஒரு திருடன் வந்தானா?

இல்லையே....?

என்ன இப்படிச் சொல்றீங்க? எங்க வீட்டில திருட வந்தவனை நான்தானே உங்க வீட்டு விலாசம் கொடுத்தனுப்பினேன்?

---

கல்யாணம் ஆகாத பெண் கீழே நிற்கிறாள் என்பதற்கு மொழி பெயர்ப்பு என்ன?

MISS UNDER STAND

---

நோபல் பரிசு பெற்ற மாபெரும் விஞ்ஞானியா ஆல்ப்ரெட் ஐன்ஸ்டீன் ஒருமுறை சாப்பாட்டுக் கடைக்குச் சென்றார். கடைக்காரர் "மெனுக்காட்டை" காண்பித்தார்.

தனது மூக்குக் கண்ணாடியை வீட்டிலேயே வைத்து விட்டதை உணர்ந்த ஐன்ஸ்டீன் "மெனுக்காட்டை நீயே படித்துச் சொல்" என்றார். அதற்குக் கடைக்காரர். "நானும் உங்களை மாதிரித்தான்...... எழுதப் படிக்கத் தெரியாதவன்" என்றான்

********

பிரபல நாவல் ஆசிரியர் ஒருவரை ஒருநாள் துப்பாக்கி முனையில் நிற்க வைத்து அவர் வீட்டை சோதனை செய்தான். கைகளைத் தூக்கி நின்ற நாவலாசிரியர் அந்தத் திருடனைப் பார்த்துச் சிரித்தார்.

"எதுக்கையா சிரிக்கிறே" என்று திருடன் கேட்க, அவர் "நான் பகலெல்லாம் தேடிக் கிடைக்காததை நீ இரவில் வந்து தேடிப் பார்க்கிறியே..... அதை நினைக்கத்தான் சிரிப்பு வந்தது." என்றார்.

********

அதோ போறாரே... அவர் 649 வாங்கியே லட்சாதிபதியாகிவிட்டார்.

பரவாயில்லையே! அதிஷ்டசாலிதான்...

அதுதான் இல்லையே.... அதற்குமுன் அவர் கோடீஸ்வரராக இருந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BABA PUBLICATIONS

உயர்ந்த தரம் · குறைந்த செலவு · குறித்த தவணை

# சங்கர் அச்சகம்
## SHAINGAR PRINT



குறுகிய காலத்தில் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்கள்!
ஒரு வருடப் பூர்த்தியில் பல இதயங்களைக் கவர்ந்தவர்கள்!
உங்கள் தேவை... என்றும் அது எமது சேவை!

3150 EGLINTON Ave.EAST
unit # 7p
SCARBOROUGH,ONTARIO
M1J 2H2
TEL:(416)264-2715
FAX:(416)264-2775
RES:(416)266-4716

INVITATION CARDS அழைப்பிதழ்கள்
BUSINESS CARDS தன்னறிமுக அட்டைகள்
CALENDARS வண்ண நிற நாற்காட்டிகள்
LETTER HEADS & ENVELOPES
கடிதத் தலைப்புகளும், உறைகளும்

PLASTI-CARD & CALENDAR CARD
RUBBER STAMPS றப்பர் சீல்கள்

FLYERS • LABELS • BAGS • CAKE BOXES
விளம்பரங்கள், பைகள், கேக் பெட்டிகள்

FULL COLOUR PRINTING பல வர்ண அச்சுப் பதிப்பு

டொரோன்டோ மாநகரில் மாபெரும் தமிழ் புத்தகக் களஞ்சியம்.
சஞ்சிகைகள், சுவாமிப் படங்கள், குழந்தையின் படங்கள்.



பொதிகையுடன் இணைந்து சங்கர் அச்சகம் வழங்கும்

## கணக்குப் புதிர்

வாசகர்களே! பின்வரும் வினாக்களுக்கான விடைகளைச் சரியாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் 5 அதிஷ்டசாலிகளுக்கு பரிசுகளை சங்கர் அச்சகம் வழங்கும். சங்கர் அச்சக உரிமையாளர், ஊழியர், உறவினர் இப்போட்டியில் பங்கு பற்ற முடியாது. இறுதி திகதி 13-03-93. போட்டி முடிவுகள் 14-04-93 பொதிகை இதழில் வெளிவரும். அனுப்ப வேண்டிய முகவரி.

BOTHIKAI-PUTHIR
203 MARKHAM ROAD.
P.O.BOX 90527
SCARBOROUGH-ONTARIO
M1J 3C3.

திருடன் ஒருவன் தென்னந் தோப்பு ஒன்றினுள் புகுந்து தேங்காய்களை களவெடுக்க ஆரம்பித்தான். 5 தொடர்ந்து இரவுகள் 60 தேங்காய்களைத் திருடினான். ஒவ்வொரு இரவும் முந்தைய இரவைவிட இரண்டு தேங்காய்கள் அதிகமாகத் திருடினான்.

முதல்நாள் இரவு அவன் எத்தனை தேங்காய்களை திருடியிருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை

உன் அறிவு மேசைவிளக்காக அல்ல, கலங்கரை விளக்காகப் பயன்பட வேண்டும்.

பலவீனர்களின் பாதையில் தடையாக இருக்கும் கருங்கல்பாறை பலசாலிகளின் பாதையில் படிக்கட்டாக அமைகிறது

துன்பங்களும் துயரங்களும் நாய்களைப் போன்றவை. அவை பயந்தவர்களையும் மிரண்டவர்களையும்தான் விரட்டி விரட்டிக் கடிக்கும்.

திருமணம் என்பது ஒரு முற்றுகையிடப் பட்ட கோட்டை. வெளியே இருப்பவர்கள் உள்ளே செல்லத் துடிக்கிறார்கள். உள்ளே இருப்பவர்கள் வெளியே வரத்தவிக்கின்றார்கள்.

சுகத்தை விரும்பினால் படிப்பை விட்டுவிடு. படிப்பை விரும்பினால் சுகத்தை விட்டுவிடு.

வாழைமரம் வெட்டும் கத்தியால் பனைமரம் வெட்டினால் அது பின்னர் வாழை மரம் வெட்டும் தகுதியையே இழந்து விடும்.

ஒருவன் என்ன பேசுகின்றான் என்பதை உலகம் குறைவாகவே கவனிக்கின்றது. ஆனால் என்ன செய்கின்றான் என்பதனையே அதிகம் கவனிக்கின்றது.

பெண்கள் இல்லையென்றால் ஆண்களுக்கு ஆறுதலே கிடைத்திருக்காது. ஆனால் பெண்களே இல்லையென்றால் ஆண்களுக்கு ஆறுதலே தேவையிருந்திருக்காது...

என்றாவது ஒருநாள் வெல்லப் போகும் கொள்கைக்காக தற்போது தோற்றாலும் பரவாயில்லை. ஆனால் என்றாவது தோற்கப் போகும் கொள்கைக்காக இப்போது ஜெயிப்பது தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களுக்கு வெளியே சில கனவுகள்....

கடலலைகளின்
தாலாட்டுப் பாடலில்
உறங்கிக் கொண்டிருந்த
என் தேசக் குழந்தையை
இனவாத அலைகளின்
இடையூறுகள்
எழுப்பி விட்டன.

என்கருவைச் சுமந்த
என் தாய்
அவளைத் தாங்கிய
என் இனிய தேசம்

எந்நேரமும்
பாடித்திரியும் பறவைகளையும்
மகிழ்ச்சியுடன் நடமாடும்
மனிதர்களையும்
அடக்கியிருந்த
அந்த தேசத்தில்
என்ன நிகழ்கிறது இப்போது........

ஆலயக் கோபுரங்களின்
அழகுமணிகள்
அபாய அறிவிப்பாகவும்
பள்ளிவாசல்கிளல்
"கொத்துவாக்கள்"
அஞ்சலிக் கூட்டங்களாகவும்..
என் இனிய தேசத்தில்
என்ன நிகழ்கிறது இப்போது

நில அறைகளையும்
வயல் வெளிகளையும்
கானகங்களையும்
உறைவிடமாக்கி
எத்தனை யுகங்களாகின

பயிர்களற்ற வீதிகள்
உற்பத்தி செத்துவிட்ட
தொழிற்சாலைகள்
வெளிச்சங்களை இழந்த
வீடுகள்

மாணவர்கள் முகம் காட்டாத
கல்விக் கூடங்கள்........
எல்லாமே இல்லாமற் போக
எஞ்சியது இன்னல் மட்டுமா...

காற்றும் மழையும்
அளவாய் புரளும்
வானமண்டலத்தில்
அபாயக் குறிவைக்கும்
விமானங்களை வீழ்த்த
புயல் வந்து வீசாதோ?

பிரஜைகளை அடக்கவும்
பிசாசுகளை அழிக்கவும்
பேய்களிடமிருந்து
பெறப்படும் துப்பாக்கிகள்
எந்த மார்க்கமாக
பயணஞ்செய்கின்றன

மனித விரல்களை
நம்பியிருக்கும்
துப்பாக்கிகள்
மனிதங்களையே
விரட்டியடிக்கின்றன

விமானங்களில் போகும்
பயணமுகவர்களை
எட்டிப்பிடிப்பதற்காக
பணக் கட்டுகளின் மேல்
ஏறி நின்று
ஏங்கியபடி காத்திருக்கம்
என் தேசத்து மக்கள்

என் கருவைச் சுமந்த
என் தாய்
அவளைத் தாங்கிய
என் இனிய தேசம்
இப்போது
எலும்புக் கூடுகளைத்
தாங்கியபடி
உலரலருகின்றது

**யாழினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபல பத்திரிகையாளர்கள் T.K. பரமேஸ்வரன் I.நிமால்ரஞ்சன் சந்திப்பு

கற்றோரை கற்றாரே காமுறுவரா? அல்லது காய்வரா என விவாதிப்பதல்ல இந்தப் பகுதியின் நோக்கம்......... இதயங்களைப் பேச வைத்து அந்த அனுபவங்களுடன் உறவாடுவது இலகுவில் மறக்க முடியாதது. அதனால்.........

ஒரே துறையைச் சேர்ந்த இருவர் மாதா மாதம் உங்களுக்காகச் சந்தித்து... உரையாடவிருக்கிறார்கள். அவர்கள் சார்ந்த துறைபற்றியும் அவர்களைப் பற்றியும் அவர்களது ஆசைகள் அபிலாசைகள் ஆற்றல்கள் அனுபவங்கள் அபிப்பிராயங்கள் ஆகியன பற்றியும் அறியும் சந்தர்ப்பம் இதனால் கிடைக்குமே?

அவர்களது உணர்ச்சிகளுடன் நாமும் கலந்துதான் பார்ப்போமா?. எந்தவித "பேசிவைப்பு" களுமற்ற. . எவ்வித நியந்தனைகளுமற்ற இச் சந்திப்பு ........ சம்பந்தப்பட்டவர்களின் வார்த்தை வாய் மொழியாகவே உங்களிடம் எப்பொழுதும் வரும்...

நிமால் ரஞ்சன் :- வணக்கம் பரமேஸ்வரன் அண்ணா! கனடா பத்திரிகை உலகில் தமிழோசை பவனிவந்து மூன்று ஆண்டுகள் பூர்த்தி யாகியுள்ளது ....... பத்திரிகைகள் வாசகர்கள் எழுத்தாளர்கள் என பரந்து விரிந்து அகண்டு விட்ட எமது சமு தாயத்தைப் பற்றி ஆரம்பிப்போமா?

## வாசகர்கள்

பரேமேஸ்வரன்:- வாங்க நிமால்.. கனடா ஈழநாட்டை வெளியிட்டு முதலாவது ஆண்டு நிறைவை வெகு விரைவில் நீங்களும் நெருங்கிக் கொண்டிருக்கின்றீர்கள்...... அப்ப அனுபவங்கள் உங்களுக்கும் புதிதல்ல ... ..வாசகர்கள் தரமானவர்கள் என்பது எனது கணிப்பு புதிது புதிதாக விஷயங்களை அறிந்து கொள்வதில் நிறைய ஆர்வம் காட்டுகின்றார்கள் என்பது என் கவனிப்பு..

ரஞ்சன் :- பத்திரிகைத் தொழில்மூலம் பலருடன் பழக முடிகின்றது பல தரப்பட்டவர்களைச் சந்திக்க சந்தர்ப்பம் கிட்டுகின்றது. பத்திரிகைதுறையில் யாழ்பாணத்தில் இருந்து வெளியான ஈழநாடு ஓர் உன்னத ஸ்தானத்தை வகித்தது. அதே வழியில் செல்வதுதான் எமது குறிக்கோள், திட்டம். அதேபோல தேமதுரத் தமிழோசையை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியாரின் குறிகோளை லட்சியமாகக் கொண்டு நீங்களும் செயல் படுகின்றீர்கள்.

பரமேஸ் :- பரவலாக பத்திரிகைகளில் இரண்டு வகை உண்டு ஒன்று வருமானத்துக்காக பத்திரிகை நடாத்துவது மற்றது ஒரு லட்சிய நோக்கோடு செய்வது.

## லாபநோக்கல்ல

ரஞ்சன்:- கனடாவைப் பொறுத்த வரை வருமானத்துக்காகவோ லாபத்துக் காகவோ பத்திரிகைகள் நடாத்துவது குறைவு செய்திப் பத்திரிகை கள் பல இங்கு வெளிவந்ததாலும் இதுவரையில் நின்று போனது.... இலவசமாக விநியோகம் செய்யப்பட்ட ஒரு பத்திரிகை மட்டுமே. ... எனவே... பொது நோக்கம்எண்ட ஒன்றுக் காகத்தான்.....

பரமேஸ் :- பொதுநோக்கம்...

# எழுத்து எழு... வாசகர் எம...

எண்டுட்டு நீங்கள் என்ன மாதிரி

## ஒரேபத்திரிகை

ரஞ்சன் :- கடைசியாக வெளிவந்த செய்திப் பத்திரிகை கனடா ஈழநாடு. நாங்கள் வந்த நோக்கம்..நிச்சயமாக ஒருவிற்பனை அல்ல.... தமிழர்களுக்கோ தமிழீழத்துக்கோ அல்லது அவற்றிற்காகப் போராடுகின்ற இயக்கங்களுக்கோ... எங்களாலை முடிஞ்சதைச் செய்யவேண்டும் என்பது தான். ஒரு கடமை. ஒரு சமூகசேவை என்ற முறையிலை செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். இங்கு வருகின்ற சகல பத்திரிகைகளினதும் நோக்கமும் இதே மாதிரி இருக்கலாம்.. பல பத்திரிகைகள் வாறதால சனங்கள் மத்தியில பல்வேறு உணர்வுகள் தான் வழிகாட்டப் படுகின்றன. அதனால எல்லாப் பத்திரிகைகளும் சேர்ந்து ஒரே பத்திரிகையாக வெ்ளி வந்தால் என்ன?

பரமேஸ் :- மக்களுக்குக் கருத்துக்கள் பல திசைகளிலும் இருந்து செல்வதுதான் சிறந்தது. எல்லோரும் சேர்ந்து ஒன்றாக செயல்படுவது என்பது தமிழர் மத்தியில் சாத்தியப்படாத தொன்று. தவிர இது கம்பியூட்டர்யுகம். கம்பியூட்டரின் பரிச்சயம் பத்திரிகைத் துறையை பல ஆண்டுகளுக்கு முன் தள்ளியதுடன் காலக் கிரமத்தில் பத்திரிகையை ஒரு வீட்டுக் கைத்தொழில் ஆக்கி விட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. புலம் பெயர்ந்த நாடுகளில் எல்லாம் ஈழத்தவர்களால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# து சந்தம்
# து சொந்தம்

பல தமிழ் பத்திரிகைகள் வெளியிடப் படுகின்றன.. வாசகர்களால் வரவேற்கப்படுகின்றன. எனவே எமது சமூகத்தை நடைமுறைக்கு ஏற்ற வகையில் வழிநடத்த வேண்டியதுதான் சகல பத்திரிகைகளின் கடமையாகும்.

ரஞ்சன் :- தமிழோசை ஆரம்பத்தில் மாதமொரு முறையாக மலர்ந்தது பின்னர் வாரவாரம் ஒலித்தது இப்ப மீண்டும மாதமிருமுறையாக வெளிவருகின்றதே!



## உத்தேசம்

பரமேஸ் :- செய்தி சேகரித்து டைப்செட்டிங் செய்து விநியோகம் செய்து.... இந்தளவும் தனிஆளாக நானே....... அதனால பல நெருக்கடிகள் தவிர குடும்பம்.. ஆனாலும் வாரா வாரம் கொண்டுவரும் உத்தேசம் இருக்கின்றது. எமது வாசகர்களின் கோரிக்கையும் இதுதான் அதுசரி நிமால் ஈழநாட்டிற்கென்று ஒரு பாரம்பரியம்இருக்கின்றது சந்தோஷம் ஆனால் கனடா. ஈழநாட்டில் கனடாவில் உள்ள........... படைப்பாளிகளின் ஆக்கங்கள் குறைவாகவே இருப்பது ஏனோ?

ரஞ்சன் :- யாழ்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலே புதிய எழுத்தாளர்கள் பரம்பரை ஒன்றை உருவாக்கியது யாழ்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு அந்த பாசறையில் பயின்றவர்களால் நடாத்தப்படுவதும் வழி காட்டப் படுவதும்தான் கனடா ஈழநாடு.

ஈழநாட்டை மக்கள் பத்திரிகையாகத்தான் கருதுகின்றோம். இதை குடும்பபத்திரிகையாகவே மிளிரவைக்கின்றோம். எனவே மக்களின் சுகதுக்கங்களை சந்தோஷங்களை ஏக்கங்களை எதிர்ப்பார்ப்புகளை இது என்றும் பகிர்ந்து கொள்ளும். உலகநாடுகள் பலவற்றில் ஈழநாடு வியாபித்திருப்பதால் பலவாசகர்களது விருப்புகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

## எழுத்தாளர்கள்

பரமேஸ் :- கனடாவில பல திறமான எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள்.... சிறுகதை எழுத்தாளர் வரிசையில.... பலர் முன்னுக்கு நிற்கினம். .... மனதைக் கவருகினம் இராசம்பந்தன்... குறமகள். ..சிவதாசன்... கிரிதரன்... கமலா பெரியதம்பி இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம் கவிதைகளில் கந்தவனம்.... நிலாகுகதாசன். இரா சம்பந்தன் போன்ற ஏராளமானவர்கள்

ரஞ்சன் :- ஆனால் எழுத்தாளர்கள் பலர் தங்களை ஏதாவதொரு பத்திரிகையுடன் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். மற்றய பத்திரிகைகளுக்கு எழுதுவது குறைவு இப்ப...... கமலா பெரியதம்பியைப் பாருங்கோ.

பரமேஸ் :- அவ.... தமிழருவிக்கும் எழுதியுள்ளா அவவைப் பொறுத்த வரையில் தனக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லும். ஆர்வம் உடையவர் தமிழ் இலக்கியம் சமயம் மற்றும் சகலதுறைகளிலும் .. பாண்டித்தியம் உடையவர். ஆனால்.. ........ சில எழுத்தாளர்கள் சில பத்திரிகையோட இருக்கிறதுக்குக் காரணம்........ தனிப்பட்ட விசுவாசம் மற்றது அவையள் கதைகளை அல்லது கவிதைகளை எவ்வளவு ஆவலாக அல்லது இதயசுத்தியோடை எழுதித்தருகினமோ அதே மாதிரி பிரசுரிக்கின்ற விதத்தைப் பொறுத்தும் அவையள் மனம் சலிப்படைஞ்சிருக்கினம் நான் பெயர் குறிப்பிட விரும்பவில்லை...... எனக்கு ஒரு எழுத்தாளர்.......... இப்ப என்னோடை நல்ல நெருக்கமாக உள்ளவர் அவர் முதல் எனக்கு எழுதேல்லை. ..... இங்கை வெளிவாற ஒரு பத்திரிகைக்கு எழுதியவர் அவர் எனக்குச் சொன்ன தென்னண்டா நான் எவ்வளவிற்கு உள்ளார்ந்தமாக எழுதினேனோ அவ்வளவுக்கு அவையள் பிரசுரித்தமுறை பிழை எழுத்துப் பிழை சகலவிதங்களிலும் தனக்கு அது திருப்தியைத் தராததால தான் அத்தப் பத்திரிகைக்கு எழுதினதை நிறுத்தின தெண்டு எத்தனையோ சிரமங் களுக்குமத்தியில எழுதும் எழுத்தாளர்கள் ஒரு மதிப்பும் மரியாதையும் நாங்க கொடுத்தால் தான் அவர்களும் திருப்தியுடன் எழுதுவார்கள்.

ரஞ்சன்: :- கந்தவனம் மாஸ்டர் கவிதையில





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர் . நிலாகுகதாசன் கூட கனடாவில் பிரபல்யம் அடைஞ்சஆள் .... கவிதைத்துறையில் மட்டுமின்றி வேறை



வேறை *field*டிலையும் நல்லாச் செய்து கொண்டு வாறார். இளையநிலா வீடியோ பத்திரிகை நல்ல முன்னேற்றமாக வருவது பாராட்டத்தக்க நல்ல முயற்சி!

பரமேஸ் :- கந்தவனம் மாஸ்டர் கவிதை உலகிலே பெரிய சாதனையைப் படைத்தவர் தமிழ்சோறு போடுமா என்று கேட்டவைக்கு சோறு போடும் எண்டளவிற்கு ஒரு மாற்றத்தையே ஏற்படுத்தினவர் தமிழாலேயே வாழமுடியும் என்ற ஒரு நிலைமையை உருவாக்கலாம் என்பதற்கு வழிகாட்டியவர். ஈழத்தமிழ் வளர்ச்சிக்கு அவரின் பங்குபல வழிகளிலுமுண்டு .. செந்தமிழ் சிந்தனைசெய் என 1978 ம் ஆண்டு ஆவரங்காலில நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி மாநில மாநாட்டில அவர் தலைமையிலே நடந்த கவியரங்கத்தில் நானும் பங்குபற்றியது இன்னும் பசுமையாக நினைவிருக்கின்றது.

நிலா குகதாசன் இளம் எழுத்தாளர்களுக்குள்ள நல்ல கவிஞன் கனல் கக்கும் கவிதைகள் பல முன்பு உலகத்தமிழரில் அவர் எழுதினார். இளையநிலா வீடியோ பத்திரிகை கூட ஆரம்பத்தை விட இப்ப நன்றாக வந்து கொண்டிருக்கின்றது.

ரஞ்சன் :- தாயகம், செந்தாமரை, தமிழோசை தமிழருவி, ஈழநாடு, இளந்தளிர், உலகத்தமிழர், விளம்பரம் ஆகியன கனடாவில் வெளிவரும் பத்திரிகைகள்,

இந்தப் பத்திரிகைகள் பற்றியோ அல்லது அவற்றின் ஆசிரியர்கள் பற்றியோ..

## பத்திரிகைகள்

பரமேஸ் :- பத்திரிகைகள் பற்றி எல்லோருக்கும் தெரிந்தது தான் பத்திரிகை ஆசிரியர் களுக்குள் செந்தாமரை ஆசிரியர் டி.பி.எஸ். ஜெயராஜ் என்னைக் கவர்ந்தவர்...... ஒரு திறமையான பத்திரிகை ஆசிரியர் ஒரு தரமான கட்டுரையாளன் பல பத்திரிகைகளில் பணி புரிந்தவர் ...அவரிடமிருந்து நிறைய விஷயங்களை அறிய வேண்டும்.. என்பதில் எனக்கு நிறைய ஆர்வம் இருக்கின்றது.



ரஞ்சன் :- நான் அவரோடை சந்திச்சு உரையாடுகின்ற *chance* இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை சந்தர்ப்பம் வந்தால் நிச்சயம் நடக்கும்

## சினிமா

பரமேஸ் :- சிலபேர் சொல்லினம் பத்திரிகையில சினிமாவைப் போடுங்கோ என்று... சிலபேர் சொல்லினம் ... தேவையில்லையெண்டு ........ ஆனால் சினிமாவைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கு சினிமா ஒரு முக்கிய பங்கு ஆற்றி யிருக்கிறது.

ஆனால் சினிமா என்ற பெயரிலை வாற இப்ப. ............. குஷ்புவினுடைய நாய் இண்டைக்கு சாப்பிடவில்லை....... போன்ற தகவல்கள் அநாவசியமானவை ஆனால் நல்ல விமர்சனங்களோ... இயக்குனர்களது கருத்துக்களோ மக்களுக்கு கொடுக்கின்ற விதத்தில் கொடுத்தால் ஆரோக்கியமாகும்....... சமுதாயத்துக்கு நல்ல கருத்துக்களை புகட்டனும்

## கிட்டு

ரஞ்சன் :- ஈழத்தமிழர் களுக்காக போராடுகின்ற ஓர் இயக்கம் என உலகநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட இயக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் பரிணமிப்பதற்கு முக்கிய பங்கு வகித்தவர் கிட்டு இலங்கை ராணுவத்திடமிருந்து முதன் முதலில் யாழ்பாணத்தை மீட்டெடுத்தவரும் கிட்டுதான் இந்த வரலாற்று நாயகன் மறைந்து இன்று 14.02.93 ல் 31 வது தினம் அனுஷ்டிக்கப் படுகின்றது அவருடைய இழப்பு ஸ்ரீலங்கா ராணுவத்தை வலுவடையச் செய்யுமென்றோ.... அல்லது தமிழீழப் போராட்டத்தைப் பின்னடையச் செய்யும் மென்றோ சிங்களத் தரப்பில் கணிப்பிடப்படுவது தவறு என்பதே எனது கருத்து.



பரமேஸ் :- ராணுவத்தில கையை வைச்சா... எல்லாத்தையும் அழிச்சுப் போடுவான்கள் என்ற ஒரு கருத்து முன்பு மக்கள் மத்தியில இருந்த காலத்திலேயே ... ராணுவத்தை முகாம்களுக்குள் சிறைவச்சு .... மக்களை சுதந்திரமாக நடமாடவைத்த ஒரு தனிப்பெரும் தளபதி கிட்டு இயக்கத்துக்கு ஒரு பெரும் இழப்பாக......... கிட்டுவினது மறைவு இருக்கலாம். ஆனால்........இதனால் இயக்கத்தின் வலிமையோ திறமையோ குன்றிவிடும் என்ற நிலை கிடையாது. தன்னைப்போல ...........ஆயிரம் கிட்டுக்களை உருவாக்கிவிட்டு மறைய அவர் தவறவில்லை. இயக்கம் எத்தனையோ தளபதிகளை இழந்தும் இதுவரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோரம் போகவில்லை. ஆனால் ஸ்ரீலங்கா ராணுவத்தை பொறுத்தவரை எதிர்பார்த்து எதிர்பார்த்து தோல்வி கண்ட நிலைமைதான் இருக்கின்றது.. சர்வதேசரீதியாக நிதியுதவி ... ஆயுதவுதவி போன்றன இதுவரை கிட்டுவால்தான் கிடைத்து வந்தது.. இனிமேல் இதுதடைபடலாம் என்று ஸ்ரீலங்கா ராணுவம் எண்ணுகின்றதோ தெரியவில்லை... இதைச் சாட்டாகவைத்துக் கொண்டு .... யுத்தமுனையில் ராணுவம் முன்னேறும் என்று கருதுமானால் பாரிய இழப்புகளைச் சந்திக்கும் என்பதை வரலாறு பதித்துவைக்கும்.. நிமால். .... பிரேமதாஸாவின் முரண்பட்ட கருத்துக்களை.... கவனித்தீர்களா?

## பிரேமதாஸா

ரஞ்சன் :- கிட்டு மறைந்த பின்னர்.... புது டெல்லி சென்ற பிரேமதாச நரசிம்மராவிடம் ...... புலிகள் ஆயுதத்தை கீழே போட்டால் தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை..... எனத் தெரிவித்துள்ளார் ஆனால் அதற்கு முன்பாக... கிட்டு மறைவதற்கு முன்பாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப் பல வழிகளிலும் முயற்சிப்பதாக அறிக்கை வெளியிட்டிருந்தார் எனவே. கபடவாதியாக சந்தர்ப்பவாதியாகத்தான் பிரேமதாஸா தன்னை காட்டி நின்றார். பிரேமதாஸா மட்டுமல்ல எந்த வொரு சிங்கள இனக் கட்சியும் இனப்பிரச்சனையைத் தீர்கின்றதற்கு இதயசுத்தியோடை இது வரை எந்த ஒரு முயற்சியையும் எடுக்கவில்லை.




தத்தமது பதவியினை காப்பாற்றும் முயற்சிகளை மட்டும் மேற்கொண்டன. இலங்கை அகதிகளை உருவாக்கும் நாடு அல்ல என ஒட்டாவாவில் உள்ள இலங்கை *embassy*யை சார்ந்த அசோக வீரசிங்க பத்திரிகைகளுக்கு அறிக்கைவிட்டது கூட சிங்களவரின் முரண்பாட்டுத்தன்மைக்கு உதாரணமாகின்றது.



## இலங்கை தூதரகம்

பரமேஸ் :- வீரசிங்கவின் கூற்று பிழையானது...... இப்ப இரண்டு வருடகளுக்கு முன்னால் ஒட்டாவாவில் உள்ள இலங்கை *embassy*யில் வேலை செய்கின்ற எத்தனையோ ஊழியர்கள் இங்கு அகதிநிலை கோரியிருக்கினம் அப்ப தூதுரவராலயமே அகதிகளை உருவாக்குகின்ற ஒரு நிலையம்தானே.

ரஞ்சன் :- இலங்கையிலிருந்து வாற ஆட்கள் கூடுதலா.........*criminal*ம்.... *terrorist*ம்... தான் என்று சொல்லியிருக்கின்றார். இதனை வேறு நாட்டவர் பார்க்கும் பொழுது எம் மீது அவர்களுக்கு இருக்கிற அபிமானம்.... குறையலாம் அதனால இப்படியான வற்றிற்குத் தொடர்ந்தும் இடம் கொடுக்காமல் பத்திரிகைகளில ஏதாவது செய்யனும். மற்றது புதிதாக அமுல் படுத்தப்படும்....... *C.86* குடிவரவு, சட்ட விதி மாற்றங்களால் பரிதவிச்சு .... . உயிரைக் கையில் பிடித்து வாற தமிழர்களுக்கு மேலும் மேலும் சிக்கல்களையே ஏற்படுத்தும் இதனையும் கனடிய அரசுக்கு எடுத்துக் கூறவேண்டும்.



பரமேஸ் :- இங்கை உள்ள பல அமைப்புகள் அந்த வழிகளில ஈடுபட்டிருக்கினம் பொதுநலஸ்தாபனங்கள் தொண்டர் ஸ்தாபனங்கள் எல்லாம் அதில் ஈடுபட்டிருக்கு ஆனால் கனடா போன்ற மனிதாபிமான நாடுகள்.. எவ்வளவு தூரத்திற்கு அந்த இரும்புக் கதவுகளை இறுகிப் பூட்டும் என்பது சொல்ல முடியாதது.

## பொதிகை

ரஞ்சன் :- பொதிகை முதலாவது இதழ் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது நிறைய விஷயங்கள் புதுமையாக இருந்தன பொதிகை மாதமலராக மட்டுமல்ல விரைவில் வார மலராக மலரவேண்டும் அது தான் எனது ஆசை எனது வாழ்த்துக்கள்

பரமேஸ் :- தமிழுக்கு சிறந்த பணிபுரியும் என்ற எதிர்பார்பை முதலாவது இதழ் தூண்டியுள்ளது வாசகர்கள் பலர்தேடித் தேடி வாங்கியதையும் அவதானித்தேன். மக்களின் ஆதரவு அமோகமாக இருப்பதை உணர்கின்றேன்.. வளர வாழ்துக்கள்.

ரஞ்சன் :- நன்றி

பரமேஸ் :- நன்றி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி இன் மரேஜ்

திருமண சேவை

சோதிட சேவை

மணமகன், மணமகளைத் தேர்ந்தெடுப்பதற்கும்
குழந்தைகளுக்குக் குறிப்பெழுதுதல்
கிரக நிலைக்கேற்ப எண்சோதிடத்தின் மூலம் அதிஷ்டகரமான பெயர் அமைத்திடவும்
மற்றும் பல சோதிட ஆலோசனைகளுக்கும்........

சோதிடம் | எண் சோதிடம் | கைரேகை

## ராசி இன் மரேஜ்
## RASI IN MARRIAGE

1668-B Victoria Park Avenue
NorthYork
Ontario
M1R 1P7

பொன். எஸ். சேகர்

PON. S. SEGAR

**Tel: 285 - 6988**

ஸ்காபரோ மாநகரில் புதியதோர் அனைத்துலகக் களஞ்சியம் !!!

# மஞ்சுளா பாஷன்

- ☑ சகலரகமான பட்டுப் புடவைகள், பருத்திப் புடவைகள்
- ☑ சிறார்களுக்கான ரெடிமேட் ஆடைகள்
- ☑ இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துவித நகைகள், ஆபரணங்கள்
- ☑ விளையாட்டுப் பொருட்கள், பதுமைகள், கலைப்பொருட்கள்
- ☑ ஒப்பனைப் பொருட்கள், மஞ்சள், குங்குமம், வாசனைத் திரவியங்கள்
- ☑ ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், அலுமினியப் பாத்திரங்கள்
- ☑ தலைநகை, தலைப்பாகை விற்பனைக்கும் வாடகைக்கும்
- ☑ சுவாமி படங்கள், ஊது பத்திகள், பக்திப் பாடல் ஒலிநாடாக்கள்
- ☑ நடனக் கலைஞர்களின் ஒப்பனைப் பொருட்கள், முத்து மாலைகள், மண்டப சோடனைகள்
- ☑ துரிதகதியில் குறைந்த செலவில் பணம் அனுப்புவதற்கு



## MANJULA FASHIONS

5818 Sheppard Avenue East, Unit # 203
Scraborough, Ontario, M1B 4Z6

TEL : 297 9875 / 297 5872 FAX: 297 9875


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலரைப் புதைக்கிறது சிலரை விதைக்கிறது.

## கவியரசு வைரமுத்து

உலகத்தின் மிகப் பெரிய சோகம் எது தெரியுமா? தாயைப் பிரிவதல்ல-தந்தையை இழப்பதல்ல-காதலியின் மரணமல்ல- பூகம்பம் நிகழ்ந்து புதைந்து போவது கூட அல்ல.

உலகத்தின் மிகப்பெரிய சோகம்- தான் பிறந்த நாடு தனக்குரிமையில்லை என்று ஒரு மனிதன் வெளியேறுவதும், வெளியேற்றப் படுவதும்தாம்.

அந்தச் சோகத்தின் கூடுதல் என்பது உற்றவனுக்கே தெரியும்; அன்றி உணர்ந்தவனுக்கே தெரியும்.

இந்த நூற்றாண்டில் சிந்தப் பட்ட அடர்த்தியான கண்ணீரும், அர்த்தமுள்ள ரத்தமும் ஈழத்தின் நியாயத்தை, சோகத்தை உலக நாடுகளை உச்சரிக்க வைத்திருக்கின்றன.

அதன் வரலாற்று நியாயங்களெல்லாம் அப்புறமிருக்கட்டும்! முதலில் அதன் வாழ்க்கையின் நியாயங்களுக்கு காது கொடுங்கள்!

தான் பிறந்த வீடு தனதில்லை_ தான் ஆடிய வீதி தனதில்லை. தனக்கு நிழல் கொடுத்த மரங்களும்_தனக்கு மலர் கொடுத்த செடிகளும்_காதலியோடு கைவிரல் சேர்த்து கதை படித்த நந்தவனமும் தனதில்லை என்னும் பலரால் உணரப் படமுடியாதது!

ஈழத்திற்கு வெளியே தேசப் படத்தில் மட்டுமே ஈழத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருக்கும் சிலருக்கு ஈழத்தின் எடை பற்றி தெரியுமா? ஈழத்தில் நின்று போராடும் போராளிகளுக்கு மட்டுமே ஈழத்தின் எடை என்ன என்பதை மில்லிகிராம் துல்லியமாய்ச் சொல்ல முடியும்.

சொந்த மண்ணின் நினைவுகளை சுமந்து கொண்டு அகதியாய் சென்னை வந்து அடைந்த ஜெயபாலன், எனது மண்ணும் இனிய வசந்தமும்_ என்றொரு கவிதை எழுதியிருந்தார்.

கண்ணீரையும் ரத்தத்தையும் குழைத்து நம்பிக்கைத் தூரிகையால் தீட்டப்பட்ட நவீன சித்திரம் அது.

**கொங்றீட் குளவிக் கூடுகளென**
**மாடித்தொகுதியில்**
**உலகாய் விரியும்**
**சென்னைப் புறநகர்**
**தனித்துப் போன ஈழவன் எனக்காய்**
**பின்பனி பெய்யுமிக்கடைச் சாமத்தில்**
**சன்னலின் வெளியே**
**பசுமரம் சிலது இருளில் புலப்படும்**
**பறவைகள் சிலது இங்கு பூபாளம் பாடும்**
**இந்தப் பறவைகள் போல என் நாட்டில்**
**நானும் வாழ்ந்தேன்**
**மாரியின் பின்னே பூத்துக் குலுங்கும்**
**எனது காடுகள்**
**வசந்த நாளில் நாணற் புதிரில்**
**முதுகு சொறியும் எனது ஆறுகள்**
**கரைகள் தோறும் கற்களைத் தேடி**
**நீல முந்தானை துவைக்கும் என் கடல்கள்**
**எனக்கென நெல்மணி**
**அள்ளித் தந்தபின்**
**மந்தைக்கட்காகப்**
**பசும்புல் குவிக்கும் என்னரும் வயல்கள்**

**எமது சுமைப் பொழுதினையும்**
**சுகம் செய்தென்றல்**
**உழைப்பிலும் களைப்பிலும் சளைத்திடாது**
**விளையாட்டாக வாழ வினை வென்று**
**பூவரச மரத்து நிழலில் அமர்ந்து**
**தேனிசை பாடுமென் தோழர் தோழியர்**
**இவையெல்லாம் இழந்து**
**அகதியாய் நானும் உயிர்த்திருப்பேனா?**
**மீண்டும்**
**என்னரும் தமிழீழத்தில்**
**உறுதியாய் இந்த வசந்தப் பொழுதை நுகர்வேன்**
**றைபிள்களோடு**

பூத்த மரத்தின் நிழலில் புல்லின் கீழே என்னரும் மண்ணுள் துயன்றோ எதிர்வரும் வசந்தப் பொழுதை நுகர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய ஈழத்துக் கவிஞர்கள் எழுது கோலை எடுத்துக் கொண்டு இலக்கணத்திற்காகவும், பாடு பொருளுக்காகவும் காத்துக் கொண்டிருக்கும் கவிஞர்களல்ல.

வாழ்க்கையின் வலி அவர்களை எழுத வைக்கிறது.

இடக்கை சிந்தும் ரத்தத்தில் வலக்கையிலிருக்கும் பேனாவுக்கு மை கிடைக்கிறது.

அவர்கள் வாழ்க்கையின் ரணம் அவர்களை நோக்கி மொழியையும், கவிதையையும் பிடரி பிடித்து இழுத்து வருகிறது.

ஒரு சம்பவம் சொல்கிறேன்.

போராளிகளில் ஒருவன் எதிரிகளால் சுடப்பட்டு இனிமேல் பிழைக்கமாட்டான் என்று நம்பப்பட்டால், அவனைக் காப்பாற்றும் முயற்சிகளில் சக போராளிகள் ஈடுபடக்கூடாது என்பது அவர்களின் யுத்தவிதி!

நள்ளிரவில் காட்டுக்குள் நீர் கொண்டு வரப்போனார்கள் இரண்டு போராளிகள், வரும் வழியில் போராளிகளில் ஒருவன் எதிரிகளால் சுடப்பட்டான். சுடப்பட்ட காயத்தோடு உயிரையும், உடலையும் சுமந்து கொண்டு இருவரும் ஓடுகிறார்கள், இனிமேல் ஓடமுடியாதபடி சுடப்பட்டவன் விழுந்து விட்டான். இனிமேல் அவன் பிழைப்பான் என்ற நம்பிக்கை இழந்து விட்ட சக போராளி அவனைச் சுட்டுக் கொன்று விடத் துப்பாக்கியைத் தூக்குகின்றான்.

சுடப்பட்டவன் தடுக்கிறான் _ சுட முயன்றவன் கொதிக்கிறான்.

"சாவுக்கு அஞ்சும் கோழையாகி விட்டாயா தோழா" என்று சுடுவார்த்தை சொல்கிறான்.

சுடப்பட்டவன் சொல்கிறான்_ "இல்லை தோழா. ... இல்லை.. என்னை அந்தக் கத்தியால் கொன்று விடு! உன் துப்பாக்கியிலுள்ள ஒரு தோட்டாவை எனக்காக வீணாக்காதே! அதைப் பகைவனின் மார்புக்குப் பயன்படுத்து!"

மரணம் பலரைப் புதைக்கிறது_ சிலரைத்தான் விதைக்கிறது!

இப்படி ஆயிரமாயிரம் அனுபவங்கள் கவிதைகளை வாழ்க்கைக்குள்ளிருந்து வடித் தெடுக்கின்றன.

மனிதமதிப்பீடுகளின் மீதும் மறு பரிசீலனை வந்தது. பெண்களைப் பற்றி ஆண்களே சிந்தித்த அவலம் போய்_பெண்களைப் பற்றி பெண்களே சிந்திக்கும் நிர்ப்பந்தம் நேர்ந்தது.

பெண் என்பவளுக்கு ஆண் சமூகம் வழங்கி வந்த அடையாளங்கள் எவை என்பதை கோபத்தோடு நினைவு கூர்கிறார் ஈழத்துக் பெண் கவிஞர் ஆ.சங்கரி

**எனக்கு**
**முகம் இல்லை**
**இதயம் இல்லை**
**ஆத்மாவும் இல்லை**

**அவர்களின் பார்வையில்**
**இரண்டு மார்புகள்**
**நீண்ட கூந்தல்**
**சிறிய இடை**
**பருத்த தொடை**
**இவைகளே உள்ளன**

**சமையல் செய்தல்**
**படுக்கையை விரித்தல்**
**குழந்தை பெறுதல்**
**பணிந்து நடத்தல்**
**இவையே எனது கடமைகள்**
**ஆகும்**

**கற்பு பற்றியும்**
**மழை பெய்யெனப் பெய்வது**
**பற்றியும்**
**கதைக்கும்**
**அவர்கள்**
**எப்போதும் எனது உடலையே**
**நோக்குவர்**

**கணவன் தொடக்கம்**
**கடைக்காரன் வரைக்கும்**
**இதுவே வழக்கம்**

மொழியை கவிதையின் வாகனமாய் மட்டும் பயன் படுத்தி வந்தது பழைய காலம். மொழியை வாழ்க்கையின் வாகனமாய்ப் பயன்படுத்தி வருகிறது புதிய ஈழம்.

*நன்றி - லண்டன் ஈழகேசரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New Brother's Driving School

# நியூ பிறதர்ஸ் றைவிங் ஸ்கூல்






- ✪ அரச அனுமதி பெற்ற சிறந்த சாரதிப் பயிற்சியாளர்.
- ✪ நீண்ட கால சாரதிப் பயிற்சி அனுபவம்.
- ✪ விரும்பிய நேரத்தில் பயிற்சி வகுப்புகள்.
- ✪ அனுபவம் மிக்க விளக்கக் குறிப்புகள்.
- ✪ முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட Dual Brakes பொருத்தப்பட்ட புதிய கார்.
- ✪ Road Test நாள் பயிற்சி வகுப்பும், வாகன உதவியும்.

Call now:
**T. Ramasamy (Rajan)**
103-A, Dundas Street East
Mississauga, Ontario
**Tel: (416) 622-1718**
Pager Numeric:377-9242

**Serving Cities:**

- Etobicoke
- Mississauga
- Toronto
- Scarborough

சகல தமிழ் வர்த்தக ஸ்தாபனங்களிலும் கேட்டு வாங்குங்கள்
New Brother's Driving School - **HAND BOOK.**

## துரித பணமாற்றுச் சேவைக்கு

☐ வவுனியா ☐ மட்டக்களப்பு
☐ கொழும்பு (சுற்றுப் புறங்கள்)
☐ நீர்கொழும்பு ☐ சென்னை ☐ சிங்கப்பூர்

33 ஆண்டுகள் வவுனியாவிலும் சில ஆண்டுகள் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் வியாபாரம் செய்து வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ற

**M.KASIPPILLAI & SONS**
ஸ்தாபனத்தின் முன்னைநாள் உரிமையாளர்

மு.காசிப்பிள்ளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**KASANS TRADING COMPANY**
**FINANCIAL SERVICE DIVISION OF**
**M.KASIPPILLAI & SONS INC.**

3228 Eglinton Avenue, East
Scarborough, Ontario
M1J-2H6
*Tel : (416) 267-8221*
*Fax : (416) 267-0620*

சர்வதேச உணவுப்பொருட்கள் சிறப்பு அங்காடி

## கொழும்பு பூட்

தரமான இலங்கை, இந்தி, கனேடிய உணவுப் பொருட்கள், உடன் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழியிறைச்சி மற்றும் மீன், நண்டு, றால் போன்ற பால் உணவு வகைகள் போன்றவற்றை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

## COLOMBO FOOD

PHOTO COPY , FAX SERVICES

2823 EGLINTON AVE EAST
SCARBOROUGH, ONTARIO
TEL : (416) 265-1265
FAX : (416) 265-0266


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்



**TV,VIDEO,CASSETTE RADIO,**
**REMOTE CONTROL,**
**MICROWAVE OVEN AND MORE**

சகாய விலை, நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்,
இலவச மதிப்பீடு,பொறுப்பேற்பு.
தரமான பயிற்சியுடன் 22 வருட தொழில் அனுபவம்
வாய்ந்தவரை என்றும் நாடுங்கள்.



**கிருபானந்தராஜா**

(London Qualified)

**Tel:(416) 438-9134**

# MULTI GROCERY

**EAST,WEST INDIAN AND CANADIAN GROCERIES**

இலங்கை, இந்திய உணவு வகைகள்,
உடன் மீன், உடன்இறைச்சி, உடன் மரக்கறி, மற்றும்
பலசரக்கு வகைகள் போன்றவற்றிற்கும்
நாட வேண்டிய இடம்.





**மல்ரி குறோசரி**

**Tel:(416) 438-3499**

**13A-1221 MARKHAM ROAD,**
**SCARBOROUGH,ONTARIO.**
**(ELLESMERE & MARKHAM)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Hello! I am Joyce*

*Hello! I am Raj*

புதிதாக அவனது பிரிவிற்கு வந்திருப்பவரின் ஆரம்ப அறிமுகங்கள் முடிந்து அவள் சென்று விட்ட பொழுதும் அவளது முகம் அவனது மனத்திரையில் எங்கோ அவளைச் சந்தித்திருக்கிறேன் என்றது எங்கே?

வேலை busyல் அவளது முகம் மறைந்து Paper களில் முழ்கிவிட்டான்

"Hey! How are you?

"Fine Thanks "

How are you?

I am OK"

How is your friend அவளது கேள்வி அவனை நிமிரச் செய்தது. அவள் யார் என்பதை புரிந்து கொண்டான்

"நான் அவனைப் பார்த்து கனகாலம் நான் நினைக்கிறேன் அவன் நன்றாக உள்ளான் "என்றன்

அது நல்லது என் பதிலளித்தவள் அக்கறையுடன் மேலும் சில கேள்விகள் அவனது நண்பனைப் பற்றிக் கேட்டுவிட்டு தனது வேலைபற்றிய சில விடைகளுடன் சீட்டுக்குச் சென்றாள் அவனது சிந்தனை பின்னோக்கி தள்ளியது.

கனடாவந்து அவனும் மாதவனும் ஓராண்டை எட்டிய சமயத்திலை ஓரளவிற்கு தாம் Settle என்று தெரிந்தவுடன் நெடுக "பாக்டறி"யிலை வேலை செய்யிறதோ என்ற அங்கலாய்ப்புடன் *Temp.* agency களில் வேலை தேட ஆரம்பித்த சமயம் அது

அப்படி ஒரு agency ல் தான் மாதவன் Joyce ஐ முதன் முதல் சந்தித்தான். சில நிமிட உரையாடலிலேயே பெண்களை கவர்ந்திழுக்கும் திறமை கொண்டவன் பரஸ்பரம் தொலைபேசி இலக்கங்களை பரிமாறிக் கொண்டார்கள்.

சில காலங்கள் கிழமைக்கு ஒரு இடமாக மாறி

## ரதன்

மாறிச் சென்ற மாதவன் இறுதியில் Downtown வங்கியொன்றில் நிரந்தரமானான். Joyceக்கும் Downtownல் வேலை கிடைத்தது. இவர்கள் இருவரது நட்பும் வளரத் தொடங்கியது. Joyce ஒரு "ரிட்டினாட் இந்தியன்" அவளுக்கு "இமிகிரேஷன்" பிரச்சனைகளும் இருந்தன. இவனோ A.D.R. ல் ஒருவாறு Landed Immigrant அவனது நட்பு அவளுக்கு மிகவும் தேவை யாகவுமிருந்தது.

கோடை காலம் அவர்களை வரவேற்றது Niagara Falls, C.N.Tower Ontario Place என வசந்தம் கொண்டாடினார்கள். சிறிது காலத்தின் பின் அவன் புதிதாக ஒரு appartment அறைக்கு அவளுடன் குடிபெயர்ந்தான்.

தமிழ்க் கலாரசாரப்படி பால் காய்சுவதற்கு நானும் நண்பர்களும் மாதவனின் apartment க்கு சென்றிருந்தோம். Trinidadians, Guyanees ப்பற்றி அவன் பல கதைகள் கேள்விப்பட்டுள்ளான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றோடை திரியும்கள் என பலவாறு. எது எவ்வாறு இருப்பினும் அன்றைய நிகழ்ச்சியில் அவள் மிகவும் ஈடுபாட்டுடன் செயல்பட்டதுபோல் ராஜுக்கு பட்டது.

"புது வீடு பிடித்துள்ளதா?"

"ஆம் இப்போதைக்கு இந்த One bed Room apartment போதும்" "பிறகு பார்ப்பம்."

# விழுமியங்களில் கரையும் தவறுகள்

"Joyce எப்போ உங்களுக்கு Wedding

மாதுவும் நானும் இப்ப ரெஜிஸ்ரேசன் செய்ய முடிவு செய்துள்ளோம். பிறகு இந்தியாவிலை அல்லது ரினிடாட்டிலை கலியாணம் கட்டுவதாக தீர்மானம் எனக்கு இந்தியாவிலை கலியாணம் செய்யத் தான் விருப்பம்

I Like Indian Culture ஏன் எனது Fore Parents இந்தியாவில் இருந்து தான் வந்தவர்கள் என்றாள். மாது அங்கே வரவே

"மாது வாழ்த்துக்கள்"

போடா போ என்று. சிரித்தான். சிலசமயம் மாதவன் என்ன சொல்கிறான் என்று புரிவதே கடினமாக இருக்கும்.

****************

டேய் ராஜ்

"என்ன ராஜ் Bay St பிஸியோட நீயும் சேர்ந்திட்டாய் போல கிடக்கு. கூப்பிட்டது கேளாம அப்படி என்னயோசினை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Nothing மாது "எப்படி life போகுது"

"சும்மா. பரவாயில்லை" I am Lucky மச்சான் தங்கச்சிமார் இரண்டு பேருக்கும் கலியாணம் முடிஞ்சுது. அடுத்தது நான் தான்"

"அது சரி மாது கொஞ்சம் அனுப்பி இருப்பாயோ இரண்டு பேருக்கு சீதனம் கொடுப்பது என்றால் சும்மாவா?

"ஓம் மச்சான் Joyce இன்ரை Savings ல் இருந்த காசைத் தந்தவள். அதோட Master visa கைகொடுத்தது. அவள் இப்ப Part time வேலையும் செய்யிறாள்"

"நீ அப்ப Part time ஒன்னும் செய்யிறதில்லையோ?

"இல்லை மச்சான் நான் இப்ப accountancy செய்யிறன்" அது சரி How is your new job எனக் கேட்டான்

"காசு கூட கூட வேலையும் கூட That's all

"Any letters Raj"

"ஒன்னும் பெரிசாயில்லை மாது Readers Digest ல் இருந்து அடிக்கடி வருது

**எம் பெண்களுக்கு ஒரு பயம்...... எனவே கணவனுடன் ஒட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இவள்...... திருமணம் ஆகவில்லை என்றாலும் எத்தனை நம்பிக்கை.**

அதுசரி *Saturday Dinner* க்கு வாறியா"

"அதுக்கென்ன வரேக்கை letters யோடை வாறன்.

விடை பெற்ற ராஜ் மனசுக்குள் சொல்லிக் கொண்டான் உண்மையில் அவன் Lucky தான் மனிசி உழைக்க இவன் School க்கு போறான்.

சனி மாலை 6 மணியளவில் ராஜ் மாதுவின் வீட்டையடைந்தான் apatmentடை தட்டிய பொழுது Joyce தான் வீட்டில் இருந்தாள்.

Hello Raj after a long timeஎன்றவள் "come in " மாது கடைக்குச் சென்று விட்டார் ஒரு 5 Minute ல் வந்திடுவார் என்றாள்

உள்ளே சென்றவள் வரும்பொழுது Tea biscut என்பவற்றுடன் வந்தாள்.

"Raj நாங்கள் மூவ் பண்ணப் போறம் வீடு ஒன்று வாங்குறம் எல்லாம் கொடுத்து எல்லாம் செற்றில் அநேகமாக அடுத்த 15 ம் திகதி யளவிலை மூவ் பண்றம்"

"எங்கை"

"Missisauga க்கு. அவருக்கு Scarboroughக்கு மூவ் பண்ண விருப்பமில்லை. அங்கை தங்கடை சனம் கூட என்றார்".

"அது சரி எப்ப உங்கடை Wedding? Registration க்கு எங்களை invite பண்ணேலை"

"இல்லை அப்படியொன்றுமில்லை. எங்களுக்கு Registration இன்னும் நடக்கவில்லை. astrology படி மாதுவுக்கு கூடாத காலமாம். அது தான் அடுத்த வருஷம் தான் Registration பின்புதான் கலியாணம்"

Raj க்கு உடனடியாக அந்த சாத்திரியை பார்க்க வேண்டும் என்ற அவசரம்.

*How is life?*

"Raj இப்ப பரவாயில்லை Mathu is a Gentle man எவ்வளவு Hard work full time job அதோட accountancy ம் Final Year சிலசமயம் நான் part time job வர லேட் என்றால் சமைச்சுப் போட்டு வந்து காரிலை pick *up* பண்ணுவார்" *Mathu* என்னோடை இருக்கேக்கை ஒவ்வொரு நாளும் சமைக்கிறவன் தானே அவனுக்கு இது என்ன கரைச்சல் என Raj நினைத்துக் கொண்டான்.

"அதோடை Raj last vacation க்கு Trinidad க்கு சென்று எங்கடை Parents யும் பார்த்து விட்டு வந்தனாங்கள். Now I am very happy என்றாள்

பொதுவாக Indiaவில் இருந்து வருபவர்களுக்கு பொறுப்புணர்வு அதிகம் என மாதுவை நினைத்து வியந்தாள்.

Joyce ஐ Raj ஆல் எடை போட முடியவில்லை. மிகவும் ஈடுபாட்டுடன் நம்பிக்கையுடன் இவ் வாழ்வை அமைத்துக் கொண்டாள். மாதுவின் உயர்வில் தன்னையே அர்பணித்துள்ளாள். எங்கள் ஊர்களில் மாத்திரம் தானா இம்மாதிரி பெண்கள்.

எம் பெண்களுக்கு ஒரு பயம் வெளியில் சென்றால் பொருளாதாரப் பிரச்சனை எனவே கணவனுடன் ஒட்டிக்கொள்கின்றார்கள் ஆனால் இவள் திருமணம் ஆகவில்லை என்றாலும் எத்தனை நம்பிக்கை.

மாது வந்ததும் வராததுமாக அவனிடமிருந்த கடிதங்களை பிரித்து பார்த்து விட்டு Carbage bag னுள் போட்டான்

Raj நாங்கள் மூவ் பண்ணப் போறம்"

Joyce சொன்னவள் ! என்னண்டு உன்னாலை இவ்வளவும் சமாளிக்க முடிஞ்சுது"

Joyce ன்ரை Parttime காசு அவள் bank கிலை Loan எடுக்கிறா

அப்படி இப்படி மாறி ஒரு மாதிரி 25,000 down போட்டனான் பால் காய்ச்சேக்கை சொல்றன் நீயும் வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி அதுக்கென்ன" மாது எப்ப உங்கடை Registration என்ன சாத்திரப்படி உனக்கு கூடாத காலமாம்"

"ஓம் ராஜ் அது தான் ஒருவருஷம் முடியட்டும் என்று பார்க்கிறன்"

Raj beer ஒன்று எடுமன் அப்போ Raj க்கு beer குடிக்க வேணும் போல இருந்தது . இந்த beer நுரையிலை தான் எத்தனை பேரை முகத்திலை அடிச்சிருக்கிறான். மாதுவையும் கேள்வி கேக்க இது உதவும்

"Cheers"

"Cheers"

Raj Joyce என்னை முழுமையாக காதலிக்கிறாள் என்னிலை அவளுக்கு அப்படி ஒர் ஈடுபாடு Raj நான் நினைக்கிறன் "மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்" *beer* ஏற ஏற பேச்சும் ஏறத் தொடங்கியது நான் இப்ப அவளின்ரை காசிலை அரைவாசி வேலைகளை முடிச்சிட்டன் வீடு, கார் படிப்பு Raj இது தான் காதல் என்றது.

> நீண்ட கூந்தலோட எங்கடை கலாச்சாரப்படி பெம்பிளைதான் தேவை. அதுதான் கலியாணத்தையும் தள்ளிப்போட்டனான். அவள் என்ன சாதியோ? எத்தனை நாளைக்கு என்னோடை இருப்பாளோ?

ராஜ் அவ்வப்போது பதில் சொல்வதுடன் அவனது பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தான்.

"உனக்குத் தெரியாது ராஜ் எனக்கு ஊரிலை நல்ல சீதனத்தோடை கலியாணம் பேசினம். அம்மா எவ்வளவு கரச்சல் கொடுக்கிறா B.Sc படிச்ச பெட்டையாம் அது தான் மச்சான் யோசிக்கிறன்."

"டேய் என்ன யோசனை உனக்கு Trinidad க்கு போய் Joyce ன் Parents யும் பாத்து விட்டாய். அவையும் . *Joyce*ன் நல்ல எதிர்காலத்தைப் பற்றி நம்பிகொண்டிருக்கிறார்கள்

What you mean Mathu

"Nothing Raj நான் Joyce க்கு துரோகம் செய்யமாட்டன்"

"முருகப் பெருமானாய் மாறப் போறியா"

"அதுவும் சரிவராது இப்பவும் *Raj* எங்கடை அப்பா அம்மா என்னை பிள்ளையார் என்று தான் நினைக்கினம்.

Joyce பரிமாற Raj மாதுவுடன் அமர்ந்து தனது இரவு போசனத்தை உண்ணத் தொடங்கினான். சிரித்தவாறு வளைய வந்தவள் *Mathu* சில சமயங்களில் Too much drinking என செல்லமாய் கடிந்தாள்

Joyce இனி என்ன உங்களுக்கு புது வீட்டிற்கு போறியள் அடுத்ததாய் என்னத்திட்டம்

குழந்தை என்றால் எனக்கு கொள்ளை ஆசை ஆனால் எல்லாம் கலியாணம் முடிஞ்சாப்பிறகு தான் எனச் சொல்லி வெட்கி குனிந்தாள்.

Raj மனதுள் ஏதோ உதைத்தது

************

வெளியே கொட்டும் பனி விட்ட பாடாயில்லை என அலுத்துக் கொண்டு வெளியில் போக Snow வை காரணம் காட்டி சோம்பேறி தனத்துடன் Raj T.V நியூஸ் பார்த்துக் கொண்டிருந்த பொழுது அருள் உள்ளே வந்தான். வரும் போது அவனுடன் பனியும் ஒட்டிக் கொண்டது போல் உதறியவண்ணம் ராஜகுலசிங்கம் உமக்கு சேதி தெரியுமோ? என்றான்

"சும்மா Raj என்று கூப்பிடு உனக்கு மாதவன் Wedding Invitation அனுப்பியிருக்கிறன்"

எப்படி இப்படி Wedding அடுத்த வருஷம் Wedding என்று தானே Joyce சொன்னவள்" என்றவன் அருள் தந்த காட்டை பிரித்து பார்த்தான் றாபிணி என்ற பெயரைக் கண்டவுடன் அவனுக்கு சற்று ஆச்சரியம்' Joyceஐ ஏமாத்தமாட்டான் என்று தான் Raj எதிர்ப்பார்த்தான் ஆனால் ?

அருள் எப்ப வந்தவன் மாதவன்?

அவன் இண்டைக்கு மத்தியானம் வந்தவன் Wedding க்காக ஒரு கிழமை லீவாம் அலுவல் கொஞ்சம் இருக்கு என்று உடனை சென்றுவிட்டான்.

"Hallo is Mathu there"

"*Who is calling*"

"I am Raj"

"Raj இப்ப அவர் இஞ்சை இல்லை புதுவீட்டை மாற்றிட்டார்"

அவனின்ரை ரெலிபோன் நம்பர் இருக்கா

ரெலிபோன் நம்பரை பெற்றவன் அவளிடம் ஏதும் பேசமுடியாதவானாக லைனை கட் பண்ணி மாதவனுக்கு

போன் பண்ணினான்.

"மாதவன் நான் இஞ்சை ராஜ்"

"என்ன ராஜ் Wedding காட் கிடைச்சதா"

"ஓம் அது சரி Joyce ஐ விட்டு விட்டு என்ன...."

இல்லை Raj அன்றைக்கு நான் சொன்னனான் எனக்கு நல்ல சீதனம் அதோடை வீட்டை Joyce ஐ கட்ட விருப்பமில்லை. மச்சான்மார் கத்துகினமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா 2 நாளாய் சாப்பிடேல்லையாம். "

"ஏன் உந்தச் சாட்டெல்லாம் நேரை விசயத்துக்கு வாரும்"

"எது எப்படியென்றாலும் அவள் மச்சான் எங்கடை கலாச்சாரமில்லை. எனக்கு மச்சான் நீண்ட கூந்தலோடை எங்கடை கலாச்சாரப்படி சாரி கட்டின பொம்பிளை தான் தேவை. அது தான் கலியாணத்தையும் தள்ளிப் போட்டனான். அவள் என்ன சாதியோ? எத்தனை நாளைக்கு என்னோடை இருப்பாளோ?

"அது சரி மாதவன் அவளை அட்டை மாதிரி உறிஞ்சிப் போட்டு இப்ப என்னன்டா?

"அவளை நான் நல்லாத்தானே வச்சிருந்தனான் அவளின்ரை ஊருக்குப் ஒருக்கா கூட்டிப் போட்டு வந்தனான் அதுக்கு மேலை என்ன செய்யிறது.

"மாது உம்மோடை கதைச்சால எனக்கு விசர் வரும் " வையும் ரெலிபோனை எனக் கத்திய ராஜ் சோபாவில் சாய்ந்தான்.

*********

Joyceஐ இறுதியாக மாதுவின் Wedding க்கு வந்தபொழுது ராஜ் சந்தித்திருந்தான். எவ்வளவு ஆசைகளுடன் புதுவீட்டிற்கு செல்வது, குழந்தைகள் பெறுவது....... அவளது முகத்தில் எந்த ஏமாற்றமும் தெரியாமல் புன்னகையுடன் ஒரு பரிசுடன் வந்திருந்தாள்.

இதைப் பார்த்து விட்டுத்தான் எம்மவர்கள் இவையள் கூடு விட்டுப் கூடு பாய்கிறவர்கள் என்கிறார்களோ? அழுது சிவந்தால் தான் மற்றவர்கள் கண்களுக்கு கவலை தெரியும் என்று இறுதி வரை அவள் அழாமல் இருந்ததை அவன் கவனித்திருந்தான்.

வசந்தத்தின் வருகைக்காக காத்திருந்தவை போல் மரங்கள் துளிர்க்கத் தொடங்கிவிட்டன. மெல்லிய இளம் பச்சை இலைகள் அழகாக காட்சிதந்தன. காரை மெல்ல நகர்த்தி வீதிக்கு கொண்டு வந்த ராஜ் அங்கு Joyce நடப்பதை அவதானித்து காரை நிறுத்தி அவளைக் கூப்பிட்டான். "வேலை பிடிச்சுக் கொண்டுதா"

"Oh Yes"

"எங்கை போறீர்"

"ஒருக்கா மாதவனின்ரை வீட்டை drop பண்ணிறியளோ" ஆச்சரியமாக பார்த்த Rajஐ அவள் மேலும் காக்க வைக்காமல் "ஒன்றுமில்லை மாதவனின் மகனின் முதலாவது பிறந்த நாள் இன்று. ஒரு சிறு பரிசு கொடுக்க வேண்டும்"

You still..............

> மனிதம் என்பது எல்லா
>
> மனிதர்களிடமும் உண்டு
>
> பெண்மையும் அவ்வாறே

"Raj அவர் என்னை ஏமாத்தி விட்டார் தான், ஆனால் நான் இன்னமும் அவரை நேசிக்கிறேன் காதல் என்பது புதிரானது. என்னால் அவரை மறக்க முடியவில்லை" எனக் கூறிவிட்டு அழத் தொடங்கிவிட்டாள் சிறிது நேரம் மௌனமாக கார் சென்று கொண்டிருந்தது. ஒரு வாறு அழுகையை நிறுத்தியவள் Keelnex ஆல் கண்களை துடைத்துவிட்டு மெலிதாக சிரித்தாள்

மனிதம் என்பது எல்லா மனிதர்களிடமும் உண்டு பெண்மையும் அவ்வாறே. கலாச்சாரம் என்ற பெயரில் ஒரு புறம் அமுக்கங்கள் மறுபுறம் ஏமாற்று வேலைகள் இவை யெதுவும் தெரியாமல் அவளது முகம் துளிர் விடும் மரங்களை போல் பிரகாசிக்கிறது. அது தான் மனிதமோ

# கவிகரன் கவிதைகள்

## உள்ளத்தில் வரைந்தேன்

காகிதம் இன்றி
கவிதையும் வரைந்தேன்
கைகளும் இன்றி உனை
ஓவியம் வரைந்தேன்
இரண்டையும் எந்தன்
உள்ளத்தில் வரைந்தேன்
இணைத்திடும் என்று
கவலையை மறந்தேன்
பகலினில்க் கூட
கனவினில்ப் பறந்தேன்

## நிம்மதியைத் தேடுகின்றேன்

பாவை உனைப் பூ என்று
பலகாலம் காத்திருந்தேன்
பூசைக்கு வருவாய் என்று
கோவிலில் நான் வீற்றிருந்தேன்
என்மனக் கோவிலில் நான்
உன்னைத்தான் வைத்திருந்தேன்
காத்திருந்த காலமெல்லாம்
கனவாய் போகுமென்று
நேற்றுவரை எண்ணவில்லை
என் கண்மணியும் உறங்கவில்லை
உறவு எனும் ஒன்றைத்தான்
உன்னிடத்தில் நான் கேட்டேன்
பிரிவு என்ற வேதனையை
உதறிவிட்டுச் சென்றாய் நீ
உதறிவிட்ட வேதனையில்
நான் கிடந்து வாடுகின்றேன்
நிம்மதியைத் தேடுகின்றேன்

## வாழலாமா?

உயிரைப் பறிக்கும் இறைவா
நீ உறவைப் பிரிக்கலாமா?
உறவைப் பிரிக்கும் மனிதா
நீ உலகில் வாழலாமா?
உலகைப் பிரிக்கும் மொழிகள்
உன் உணர்வைப் பிரிக்கலாமா?
உணர்வை இழந்த பின்பு
உலகில் வாழலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டுக்கு இனியவன்.

## கமலா பெரியதம்பி

பொதிகை மலைச்சாரல் அதிக வளம் கொழிக்கும் ஓர் அழகிய பிரதேசம். குறிச்சித் திணை நிலத்திற்கும் சாலச்சிறந்த ஓர் இலக்கணம். அச்சாரலைத் தழுவும் இளம் தென்றலில் தமிழ் மணம் கமழும். தமிழ் தந்த குறுமுனிவன் ஒரு நாள் அங்கே பெரும் சோதனைக்கு ஆளானான். அகத்தியனையே அயரவைத்து விட்டான் ஒரு மாயச் சிறுவன். காக்கையாக வந்து துறவியாம் குறுமுனிவனின் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டான். காட்டாறெனப் பொங்கிப் பாய்ந்து காவிரி நதி. கோபம் கொண்ட அகத்தியன் குறும்புக்கார சிறுவனைக் குட்டக்கை எடுத்தான். ஆனால்... ...அடுத்த கணம் அவன் அகக் கண் திறந்து கொண்டது. அன்போடு அடியவர் போடும் சுழிக்குள் அடங்கி அருள் செய்யும் அப்பிள்ளை யார் என்பதை அகத்தியன் அறிந்து கொண்டான். அதனால் தன் தலையிலேயே மும்முறை குட்டிக்கொண்டான். ஆனைமுகனாம் அப்பிள்ளையாரின் அடிதொழுது நின்றான். அன்று முதல். அற்புதம் நின்ற கற்பகக்களிறை அடியவர் எல்லாம் மும்முறை குட்டிக் கும்பிடுவதோடு தோப்புக்கரணமும் போட்டு பூஜை இயற்றலாயினர்.

அன்று ....அசுரரின் ஆற்றலை அழித்து அறம் சிறக்கவும்,அழியப்புகழ் பெற்ற அமர வாழ்விற்கு தடையாகும் விக்கினங்களை நீக்கவும் ஒரு மைந்தனை ஆக்கித் தரும்படி சிவபிரானை வேண்டினர் தேவகணதியர். பரமனோ பார்வதியின் தயவை நாடினான். உமையவள் உவகை பூத்தாள். உடனே சிவசக்தியின் அருள் அமுதாக விளைந்து உருவெடுத்தான் விநாயமூர்த்தியாம் கணநாதன்

ஓம். என்னும் பிரணவ மந்திரத்தின் • முலப்பொருளே மகேஸ்வரியின் மூத்த மைந்தன் தான் யானையின் காது, தலை துதிக்கை ஆகிய மூன்றும் கூடி ஓம் என்பதன் இயல்பை இனிதே விளக்குகின்றன. அதனால் தான் ஓங்கார ஐங்கரன் அகன்ற பரஞானத்தின் வடிவாக, உருவில் பெரிய பெருமானாகத் தோன்றி பேர் அருள் புரிகின்றான்.

உலகநாயகி உலகிற்கு உவந்து அளித்த பிள்ளை அல்லவா அன்னைக்கு எப்போதும். பிள்ளையாகவே இருக்கத்திருவுளம் கொண்டான். தனக்கு இளைய முருகனைக்கண்டால் குழந்தையாகி குறும்பு செய்வான். ஆறுமுகனின் தலை எண்ணிக் குட்டுவான். திருமுருகன் சும்மா விடுவானா? வேழமுகனின் தும்பிக்கையை முழம் அளந்து கிள்ளி விடுவான். இருவரும் உமையவளிடம் சென்று முறையிடுவர். தேவநாயகிக்கோ போதும் போதும் என்றாகிவிடும் ஞானப்பழத்திற்காக ஞானமே உருவான சிவகுமாரர் சண்டை இட்டது எதற்காக ? உலகோருக்கு ஒரு உண்மையை விளக்கவே முந்தி வந்த கணபதி பெற்றோரைச் சுற்றினான். இளைய பெருமாளோ இவ்வண்டங்கள் அனைத்தையும் வலம் வந்து பழம் பறிபோனதால் வம்புக்கு நின்றான். அம்மையப்பன் வேறு அண்டங்கள் வேறு அல்ல என்னும் பேருண்மையை அத்திருவிளையாடல் நிரூபித்து விட்டதல்லவா? அந்த மகாதேவி ஏன் தன் முதல் மைந்தனுக்கு மும்மத யானையின் முகத்தைப் படைத்தாள் என்பது எவருக்கும் ஐயத்தைக் கிளப்பலாம். இதனை விநாய புராணம் முதலிய வேத புராணங்கள் விதவிதமான கதைகள் மூலம் விளக்குகின்றன. அத்தனையும் வித்தக விநாயகனின் தத்துவத்தை விளக்கவே விழைகின்றன. அன்னை ஓம் என்னும் பிரணவத்தையே அரன்மகனுக்கு முகம் ஆக்கினாள். முக்கண்ணன் மகனல்லவா? அதனால் புற உலகைப் பார்க்க இருகண்களோடு பரஞானத்தை சுட்டிக்காட்ட நெற்றிக்கண்ணையும் கொடுத்தாள். சித்திவிநாயகனின் சின்னஞ்சிறு நெற்றியிலே சிந்தூரப் பொட்டிட்டு அழகு பார்த்தாள். இகபரதத்துவங்களை எப்போதும் கேட்டு அறியவே அவனுக்கு விரிந்த இரு பெரிய செவிகளைப் படைத்தாள். நல்லறிவு வேண்டுவோர் தன் செல்வனைப் போல் பேசுவதைக் குறைத்து கேட்பதை கூட்டிக் கொள்ளவேண்டும் என்பதற்கே அவ்வாறு செய்தாள் அன்னை

நம்பிய அடியவருக்கு முத்திதரவே அவனுக்கு தும்பிக்கை தந்தாள் தேவி? அது மட்டுமா? ஆன்மாக்களை நல்வழி நடத்திச்செல்லவே அவன் ஒரு கையில் அங்குசம். தீவினை. செய்வோரைத் தண்டிக்கவே. மறுகையில் பாசம். தளைக்கும் அப்பாசக்கயிறு நல்லார் தடைகளை நீக்கும். பொல்லர்க்கோ பல தடைகளை ஆக்கும். புலன்களை அடக்கி நலமான நெறியில் சிந்திக்கும் சக்தியை வளர்க்கவே விநாயகனின் கை ஒன்றில் ஜபமாலை. தியானத்தின் சின்னமாய் அது விளங்க, அடுத்த கையில் தியாகத்தின் சின்னமாய் ஒளிர்கிறது ஒடித்த அவன் ஒற்றைக் கொம்பு. நல்வாழ்வுக்கு நிறையுணவு அவசியம் என்பதை உணர்த்தவே ஆனைமுகன் இனிய மோதகத்தை ஒரு கையில் ஏந்தியுள்ளான். உண்டு தன் வயிற்றை நிரப்ப அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலச்சந்திரனின் பேழை வயிற்றிற்குள் பேர் அண்டங்கள் யாவும் அடங்கி உள்ளன. அதனால் பேழை என்னும் பொருள்பட அவனை லம்போதரன் எனவும் போற்றுகிறோம். ஆதிசேடனுக்கு அருள் செய்து அவனையே தன் வயிற்றைத் தாங்க வென சுற்றி கொண்டவர் கணேசன். சர்ப்பம், கர்ப்பகோடி காலம் முதல் சக்தியின் சின்னம் என்பதைக் காட்டவே இந்தக் கோட்பாடு.

அன்னைமீது ஆனைமுகன் கொண்ட ஆராத பக்தி ஈடுஇணையற்றது. அதை அவனுக்கு உணரவைத்தவள் அம்பிகையே. பாலனாய் விளையாடிய கணபதி ஒரு நாள் ஒரு பெண் பூனையைத் துரத்திப்பிடித்து வருத்திவிட்டான். அதனால் அப்பூனைமுகத்தில் உண்டான காயத்தை அவன் பொருட்படுத்தவில்லை. ஆனால் அதே காயத்தினை அன்னை முகத்தில் கண்டதும் திடுக்கிட்டுத் தடுமாறினான். பெண்பாகம் கொண்ட பரமனின் நாயகி பெண் உருக்கொள்ளும் உயிரினம் யாவும் உமையவள் வடிவாகும் என்ற உண்மையை உரைத்தாள். அன்று தொட்டு அத்தனை பெண்களும் அவனுக்கு அன்னையர் ஆயினர். அதனால்தான் அவன் நித்திய பிரம்மச்சாரியாகவே இருந்து விட்டான்.

ஆயினும் அவ்விநாயக் பெருமானின் மகிமையை மாநிலத்தோர் அறியவே சித்தி, புத்தி எனும் இரு சக்திகளை அவனோடு இணைத்துக் கூறுவதுண்டு. ஆனால் அவனோ ஆண் என்றும் பெண் என்றும் பேதம் ஏதும் அறியாதவன். அவனது வாகனமோ பார்ப்பவருக்கு ஒரு விந்தையான பிராணி தத்துவம் ஏது? ஆன்மா பெரியதில் எல்லாம் பெரியது! அதே சமயம் சிறியதில் எல்லாம் சிறியதும் அதுவே பெரிய உடலில் பெரிய ஆன்மாவும் சிறிய உடலில் சிறிய ஆன்மாவுமா இருக்கின்றன? உடலும் உயிரும் இணைந்ததே ஜீவாத்மா. உடல் கூட்டில் எலி சிறிய பிராணி ஆயினும், அதன் ஆன்ம சொரூபம் அளப்பரியது அல்லவா? ஐங்கரனின் பெருச்சாளி இத்தத்துவத்தை ஐயத்திற்கு இடமின்றி விளக்க வல்லது.

மேலான தத்துவப்பொருளே உருவான மூலாதாரன் தன்னை முதலில் வணங்குவோருக்கே முழு வெற்றியைத் தருவான்! தன்னை வணங்காதவருக்குத் தக்க பாடம் கற்பிக்கத் தவறான்! திரிபுரத்தை வெற்றிக்காண சிவனுக்கு தேவர்கள் சமைத்த தேரின் அச்சை அழித்தான். குறவள்ளியை மணம்புரியச் சென்ற குமரன், அண்ணனை மறந்ததால் அவனை அலைக்கழித்தான். வேதவியாசர் விநாயக வழிபாட்டின் மகிமை அறிந்தபின் தான் அவருக்குத் தானே முன்வந்து மகாபாரதத்தை அவர் சொல்ல எழுதினான். இடையிலே எழுத்தாணி உடைந்ததும் சற்றும் தயங்காது தன் தந்தத்தையே ஒடித்து, எடுத்த காரியத்தை முடித்துக் காட்டினான். அந்த மூஷிகவாகனன்! அதனால் ஏகதந்தன் என்னும் திருநாமத்தையும் பெற்றான். செயற்கரிய எந்த சாதனையும் தியாகம் இன்றி சித்தி அடையாது என்பதை நமக்கெல்லாம் புத்தி புகட்டவே தன் தந்தத்தை தியாகம் செய்த விநாயகனை வியந்து போற்றாதார் இல்லை!

ஓங்காரனின் திருவிளையாடல்கள் தான் ஒன்றா, இரண்டா? அவற்றில் ஒன்று அவன் சனீஸ்வரனை வென்ற கதை. ஏழரை நாட்டான் ஒரு தடவை விக்கினேஸ்வரனை நாடிச்சென்றான்." வந்த காரணம் என்ன? " என வினவினான் விநாயகன் "ஐயனே" தங்களை நான் பீடிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது என்பதைத் தங்களுக்கு ஞாபகமூட்டவே வந்தேன்.." என்றான் சனிபகவான் "ஆகா!. மிகவும் நன்றி நீர் எப்போது என்னைப் பீடிக்கவேண்டும் என்பதை அதோ அந்தச் சுவரில் எழுதிவைத்து விட்டுப் போய்வாரும்!" என்று கூறினான் கணநாதன். உடனே சனி பகவான் "நான் நாளைக்கு விநாயகப் பெருமானைப் பீடிக்க வேண்டும், "என்று எழுதி விட்டுச் சென்றான். அதன்படி அடுத்த நாள் வர, அந்த வரசித்திவிநாயகன் சனிபகவானுக்குச் சுவரைக்காட்டி அதில் அவன் எழுதிய வாசகத்தை வாசிக்கும்படி வேண்டினான். சனிபகவான் வாசித்தும்," அப்படியானால் இன்றைக்கு ஏன் வந்தீர்? நாளை வாரும்." என்றான். ஏரம்பன் இவ்வாறே நாள்தோறும் வந்தும் விநாயகனைப் பீடிக்க முடியாமல் ஏமாந்து சென்றானாம் காகமேறும் சனி பகவான்!

இதே போல் தான் ஆத்மலிங்கத்தைக் கவர்ந்து சென்ற இராவணேஸ்வரனையும் ஒரேயடியாகத் தன் புத்தியால் வென்றான் அந்த பிரணவஸ்வரூபன். அருந்தவம் செய்து வரமாகப் பெற்ற ஆத்மலிங்கத்தை ஆனந்தமாகக் கொண்டு தென்னிலங்கை நாடி நடந்தானாம் இலங்கேஸ்வரன். அரிய அந்த லிங்கத்தைக் கைவிட்டாலோ அது வைத்த இடத்தில் அசையாது நிலைத்துவிடும். அதனால் அதனைத் தன் உயிர் போலக் கருதிக் கவனமாகக் கொண்டு சென்றான் அசுரவேந்தன். ஆத்மலிங்கத்தை அவன் வெற்றிகரமாகக் கைப்பற்றித் தன் நாட்டை அடந்தாலோ அமர உலகே அழிந்துவிடும். அதனால் ஆனைமுகனை அண்டி அடைக்கலம் புகுந்தனர் அமரர்கள். அதனால் ஆயர் குலச் சிறுவனாய்த் தோன்றினான் கணேஸ்வரன். இராவனேஸ்வரன் வயிற்றல் வற்றாத கங்கையென நீர் நிரம்பியது. மாடுமேய்த்துக்கொண்டிருந்த மாயச்சிறுவனை தன் உபாதை தீரும்வரை ஆத்மலிங்கத்தைச் சற்று நேரம் கையில் வைத்திருக்குமாறு மன்றாடி நின்றான் அந்த மாமன்னன். "இராவனா" எனக்கு நிற்க நேரமில்லை. ஆனால் உனக்காக ஒரு சிறு பொழுது மட்டுமே உன் ஆத்ம லிங்கத்தை வைத்திருப்பேன். அதனால் சீக்கிரம் உன் ஜல உபாதை தீர்ந்ததும் நீ திரும்பி வந்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று முறை உன்னைக் கூப்பிட்டுப் பார்ப்பேன். நீ வராவிட்டால் உன் ஆத்ம லிங்கத்தை நிலத்தில் வைத்துவிடுவேன். சம்மதமா? என்று நிபந்தனை விதித்து வினவினான் சிறுவன். வேறுவழியின்றி அதற்கு உடன்பட்டு உடனே ஓடிச்சென்றான் இராவணன் பாவம்! அவன் போன காரியம் இலேசில் முடியுமா என்ன? இடைச்சிறுவன் சிறிது இடைவெளி விட்டு இரண்டு தடவை இராவணனை அழைத்தான். பின் மூன்றாம் தடவை கூவியதும் புன்னகையோடு புனித ஆத்ம லிங்கத்தைப் பூஜித்தவாறே பூமியில் வைத்துவிட்டு அடுத்த கணம் அவ்விடம் விட்டு மறைந்தான் மகாகணபதி!

ஞானக் கொழுந்தல்லவா அந்த ஞாலமுதல்வன்! அவனை யாரோ வெல்ல வல்லார்? நல்லடியார்களில் தலைச்சிறந்த வல்லாளனுக்கு வரம் தந்து வல்லாள கணபதி என்று அழைக்கப்படுவன் ஆனைமுகன். அடியார்க்கு எளியவன். வழிபாட்டிற்கு இனியவன். இளம் பிள்ளைகள் மார்கழி மாதத்தில் சாணத்தால் தன்னைப் பிடித்து வைத்து தொழுவதை அன்புடன் ஏற்பவன். வீட்டிலோ, வெளியிலோ, ஆலயத்திலோ, அரச மரத்தின் அடியிலோ, நாட்டிலே எவ்விடத்தில் நல்லடியார் தன்னை இருத்தி விழிபட்டாலும் அவ்விடத்தே தோன்றி அருள் செய்பவன். அவனுக்கு ஆடம்பரமான ஆராதனைகள் அவசியமில்லை! மண்ணுலோ, மாவாலோ, மஞ்சள் தூளாலோ அவனை உண்மையாக எண்ணிப் பிள்ளையார் எனப் பிடித்து வைத்து விட்டால் போதும்! கேட்டவுடன் கேட்டவர்க்கு கேட்டவரம் யாவும் தந்து உதவுவான், தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லா விநாயகன்! அறுமுகம் புல்லும், வன்னி மரமும் அவன் விரும்பி உறையும் அருட்சின்னங்கள், கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்தாலும் தீயவர் நெஞ்சில் அவன் உறைவதில்லை, கோவிலின் பெயரால் கொள்ளை லாபம் தேடுவோரை பிள்ளையார் ஓட ஓட விரட்டாமலும் விடுவதில்லை.

ஆகவே தான் வேதநெறி கூறும் வைதிக மதம் யாவும் விநாயகனை வழிபாடு செய்கின்றன. பௌத்த, சமண, ஜைன மதத்தவர் கூட தம் ஆலயங்களில் கணபதியின் வடிவத்தை வைத்து வழிபாடு இயற்றிய பின்பே நித்திய பூஜைகளை நிறைவு செய்கின்றனர். அதனால் தான் வடகயிலை முதன் தென்னிலங்கை வரை மட்டும் அல்லாது, தென்கிழக்காசிய நாடுகளிலும் விநாயக வழிபாடு வேர் ஊன்றி உள்ளது. எனக் கூறினும் மிகையில்லை! அவன் நாமத்தை போற்றாத நாவும் இல்லை!! கூப்பித் தொழாா கையும் இல்லை!! எனவே.

"அடியார்க்கு எளிய
ஆனைமுகன் அடி போற்றி"

# வாழநினைத்தால்...

சிந்தையிலே எழும் சிறுதுளிகள் பேனாவின் முனையிலே எழுத்துக்கள் வடிவமானால் அது பெருவெள்ளமாய் ஊற்றெடுக்கும். பெரு வெள்ளத்தின் முதற் கண்ணோட்டம் நம்மை படைத்தவனையே சுற்றிவலம் வருகிறது.

ஆம்! படைப்பின் மகிமையை உற்று நோக்குவோம் "படைத்தவன் படைப்பெல்லாம் மனுவிற்கான மனுவைப் படைத்தான் தனக்காக". விந்தையிலும் விந்தை.

அழகுதரும் இயற்கை காட்சிகள், மேலே வானம், கீழேபூமி, இடையிலே இயற்கையின் எழில் தரும் எண்ணற்ற படைப்புக்கள். இத்தனையும் தன் சொந்தத் தேவைக்கென படைக்கப்பட்ட மனிதனுக்கு, இறைவன் தந்த இனிய அன்பளிப்புகள். தனக்கென உருவாக்கிய மனித படைப்பில் எத்தனை எத்தனை வேறுபாடுகள். உருவத்திலே வேறுபாடு, வாழும் வாழ்க்கையிலே வேறுபாடு, செயல்களிலே வேறுபாடு, எண்ணங்களில் வேறுபாடு இப்படியே பார்த்தால் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு இத்தனை வேறுபாடுகளுக்குமிடையில் தனக்கென படைக்கப்பட்ட மனிதனின் வளமான வாழ்விற்கென்றே ஒரு விசேட கொடையை இரக்கத்தின் இறைவன் இலவசமாய் தந்திருக்கிறார்.

அதுவே "பகுத்தறிவு" என்னும் விசேட அறிவு. எம்மீது கொண்ட எல்லையற்ற அன்பினால் இறைவன் நமக்களித்த அளப்பரிய ஆறாம் அறிவாகும். மனிதனுக்கென விசேடமாக கொடுக்கப்பட்ட இவ்வறிவின் பலன் யாதென உள்ளத்தில் உணர்ந்து கொண்டால் சிந்தையிலே சிதறவிட்டால் எழுவதென்ன? மனிதன் முதலில் தன்னை படைத்த இறைவனை அறிந்து அவரைதன் வாழ்வின் மையமாய் வைத்து நேசித்து அவர் வாழ்ந்து காட்டிய வாழக்கைப் பாதையில் நடந்து வருவோமானால் மக்களே! சிந்தியுங்கள்!! புலன்களை அடக்கி ஆழமாய் சிந்தியுங்கள்!!! சற்றே பொறுமையாய் சிந்தியுங்கள் சிந்தனையில் எழும் சிறுதுளிதான் என்ன? எம்வாழ்வின் இன்னல்யாவும் மின்னல் போல் மறையாதா? எம்மை படைத்தவரை அன்பு செய்து நாம் வாழ்வதினால். அது மட்டுமா! கணத்திற்கு கணம் படைத்தவனின் எண்ணத்தில் அவர் வழி வாழ்ந்தால் நம்வாழ்வே ஒரு புனித பூங்காவின் சோலையாகும். ஆம் வாழத் தெரியாமல் வாழ்வது நம் தவறு அது இறைவன் விட்ட வழி அல்ல "வல்ல தேவன் எம்மை வருத்துவது கொல்லவல்ல நம் பொல்லாக்குணம் போக்க" எமது தீய குணங்களை அகற்றி நற்குணங்கள் மேலோங்க நம்மை பக்குவப்படுத்தி தமக்குகந்த சொந்தப் பொருளாய் எந்நாளும் எந்நேரமும் வாழவைக்க ஆசிக்கும் அந்த நல் இறைவனைச் சிந்தித்து பலன் பெறுவோம் பயன் அடைவோம்

ரஞ்சினி நவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புத் தம்பி தங்கைகளுக்கு, உங்களது சின்னச் சின்னக் கைகளால் கதைகள்....கவிதைகள்........ துணுக்குகள். .கணக்குகள் எழுதி பாப்பா அக்காவிற்கு அனுப்பலாமே? விலாசத்தை அம்மா அப்பாவிடம் கேளுங்கள்.

பாப்பா அக்கா.

## தாத்தாவின் தந்திரம்

ஒரு தாத்தா புகையிரதத்தில் போய் கொண்டிருந்தார். அவர் அடிக்கடி நிறைய பணம் எண்ணிக் கொண்டிருப்பதை எதிரிலே இருந்த திருடன் கவனித்தான். இராத்திரி தாத்தா தூங்கினதும் அவர் பெட்டி படுக்கை சட்டை வேட்டி எல்லாம் தேடிப் பார்த்தான். உஹூம். ! பணத்தைக் காணவேயில்லை. காலையில் எழுந்திருந்து பார்த்தால் திரும்பவும் தாத்தா பணம் எண்ணுகின்றார்! தாத்தா... தாத்தா..... இரவு எங்கே பணத்தை வச்சே! என்று திருடன் கேட்டான். தாத்தா பொக்கை வாயால் சிரித்துக் கொண்டு, நீ திருடனென்று எனக்குத் தெரியும். நீ ஓர் இடத்தில் மாத்திரம் பணத்தைத் தேடமாட்டாய் என்பதைத் தெரிந்து கொண்டு அங்கே வைத்தேன் என்று திருடனுடைய தலையணையைக் காட்டினார்.

## தாய் சொல்லைத் தட்டாதே!

(கதைப்பாட்டு)

காலை வேளை கமலம் வீட்டுக்
கோழி எட்டுக் குஞ்சுடன்
சோலையோரம் இரையைத் தேடிச்
சுற்றி சுற்றி வந்தது.

பஞ்சு போன்ற வண்ண வண்ணக்
குஞ்சுக் கூட்டம் தாயுடன்
கொஞ்சிக் கொஞ்சி கொத்தி கொத்தி
கூடியோடிச் சென்றது.

பரந்த வானில் பறந்து பறந்து
பருந்து வட்டமிட்டது
அறிந்த கோழி பயந்து மக்காள்
அருகில் வாரும் என்றது.

தாயின் சொல்லை ஏழு குஞ்சும்
தலையிற் கொண்டு வந்தன
தூய வெள்ளைக் குஞ்சு ஒன்று
துடுக்குச் செய்து சென்றது.

அந்தக் குஞ்சை உணவு தேடி
அலைந்த பருந்து கண்டது
வந்து கொத்திக் கொண்டு
வான வீதி சென்றது.

" கீக்கீ" என்ற குஞ்சின் ஓலம்
கேட்டுக் கோழி நொந்தது
தூக்கிச் செல்லும் பருந்தைக் கண்டு
துடித்துக் கொண்டு நின்றது

பெற்ற தாயின் வார்த்தை போற்றிப்
பேணவேண்டும் பிள்ளைகாள்
பற்றுளான சீல மோங்கும்
கண்ணிய வாழ்வும் வாழலாம்

## விடுகதைகள்

1. கண்காண உருவம் உண்டு
கட்டிப் பிடிக்க உருவம் இல்லை.
2. வெள்ளைப் பிள்ளையார்
கோவிலில் விழுந்து கும்பிட
இடமில்லை
3. ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம்.
4. நன்னுவர் தின்ன மாட்டார்.
5. காய்கறித் தோட்டத்திலே ஆடி
அசையுதாம் பாம்பு.
6. கட்டைப் பெண்ணுக்குப் பட்டுப்
புடவை.
7. ஒருவனைக் கூப்பிட்டால் ஊரையே
அழைப்பான்.
8. உடம்பில்லாத மனிதன் ஊரையே சுற்றுவான்
9. நான் எடுத்த படம் அடுத்தவர் பார்க்க முடியாது.

### விடுகதைக்கான விடைகள்.

1. நிழல் 2. முட்டை 3.உள்ளங்கை
4. பாக்குவெட்டி 5. புடலங்காய்
6. வெங்காயம் 7. காகம் 8. காற்று
9. கனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்கணித ஜோதிட முறைப்படி Lotto 649க்கு அதிஷ்டகரமாக எண்களை தெரிவது எப்படி?

## இல.2 க்கான பலன்கள்

**ஆர் உருத்திரநாதன்**

எண்கள் நமது வாழ்க்கையில் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நம்மோடு தொடர்பு கொண்டு விடுகின்றன. நாம் ஏதாவது இலக்கமுள்ள வீட்டில் குடியிருக்கின்றோம். ஏதாவது இலக்கமுள்ள மோட்டார் வண்டியைப் பாவிக்கின்றோம் இப்படி பலவற்றில் எண்கள் முக்கிய பங்கை வகிப்பதை நீங்கள் அவதானிக்கலாம். சில சந்தர்ப்பங்களில் நீங்கள் வசிக்கும் வீடு உங்களுக்கு அதிஷ்டம் இல்லாது இருக்கலாம் உங்கள் பிறப்பு எண்ணிற்கு ஒத்ததான இலக்கமுள்ள வீடு மாறும் போது முன்பு இருந்த பல துன்பங்கள் நீங்கி நிம்மதியையும் அதிஷ்டத்தையும் தரலாம்.எண்கணித ஜோதிடத்தைப் பின்பற்றுபவர்கள் தங்களுக்குரிய அதிஷ்ட எண்களை எல்லா சந்தர்ப்பங்களிலும் பின்பற்றினால் மற்றவர்களைக் காட்டிலும் நன்மைகள் பல ஏற்படும் என்பது எண்கணித ஜோதிட ஆராய்ச்சியாளர்களின் முடிவாகும்.

சென்ற மாதப் பொதிகையில் 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்த எண் 1 ஐ உடையவர்களின் அதிஷ்ட எண்களைப் பார்த்தோம். இம்முறை எண் 2 ஐ உடையவர்களின் அதிஷ்டத்தைப் பார்ப்போம்.

எண் 2(சந்திரன்)

இரண்டு எண் உள்ளவர் யார்?

ஜனவரி முதல் டிசெம்பர் வரையுள்ள எந்த மாதத்திலாவது 2,11,20,29 ஆகிய திகதிகளில் ஏதாவது ஒன்றில் பிறந்தவர்கள் எண் 2 ஐ உடையவர்கள் ஆவர். இந்த எண்ணையுடையவர் எந்த மாதத்திலாவது 7, 16, 25 ஆகிய திகதி ஏதாவது ஒன்றில் அதிஷ்டம் பார்க்கப்படும் Lotto இவர்களுக்கு மற்றைய திகதிகளை விட மிக நன்மை தரக்கூடியது.

1, 10,11, 19, 20, 28, 29 ஆகிய திகதிளும் அதிஷ்டத்தை உண்டாக்க கூடியவை 08,09, 18, 26 ஆகிய திகதிகள் பணவிரயத்தை ஏற்படுத்தலாம். இத் திகதிகளில் Lotto வில் பங்கு பற்றுவதை கூடியவரை தவிர்ப்பது நல்லது.

ஞாயிறு, திங்கள், வெள்ளி ஆகிய கிழமைகள் இவர்களுக்கு அதிஷ்ட கிழமைகள் ஆகும். இக் கிழமைகளில் 7, 16, 25 ஆகிய திகதிகள் வருமானால் இவர்கள் நல்ல பலனை அடையக் கூடும்.

இவர்களின் அதிஷ்ட எண்கள் 2, 7, 11, 16, 20, 25, 29, 34, 38, 43, 47

யூன் 20ம் திகதியிலிருந்து யூலை 27ம் திகதிக்குள் 2 ஐ உடைய திகதிகள் மிக்க நல்லது இந்த அதிஷ்டகரமான எண்களை முறைப்படி பாவித்து செயற்பட்டாலும் சில சந்தர்ப்பங்களில் பலன் கிடைக்காமல் போகலாம். இவ் எண்களை நாம் எப்போதும் தொடர்ந்து பின்பற்றி வந்தால் நம்மை விட அதிஷ்டம் குறைந்தவர்கள் பங்கு பற்றும் நேரங்களில் நமக்கு வெற்றி கிடைப்பது இலகுவாகிவிடும். எனவே இந்த எண்சோதிட முறைப்படி உங்களுக்குரிய அதிஷ்ட எண்களை உபயோகிப்பதன் மூலம் Lotto சீட்டுக்களை வாங்கினால் பயன் அடைய வாய்ப்புகள் உண்டு

********************

**பத்திரிகைகள் சஞ்சிகைகள் யாவற்றிற்கும் பொதுவானதோர் அடிப்படை ஆதாரம் படைப்புகள் யாவும் சுகமான பொய்கள் (கற்பனைகள்) என சொல்லி வைப்பது. இதற்குப் பொதிகையும் விதிவிலக்கு அல்ல. எழுத்தில் ஆர்வம் உள்ள அனைவர்க்கும் களம் அமைக்க பொதிகை விரும்புகின்றது. அறிஞர்கள் ஆர்வலர்கள் அனைவரிடமிருந்தும் மனதுக்குப் பிடித்தமானவற்றை பொதிகை ஆவலுடன் எதிர்பார்க்கின்றது. அனுப்பி வையுங்கள்.**

**ஸ்ரீமுக வருடப் பிறப்பை முன்னிட்டு ஏப்ரல் மாத பொதிகை அதிக பக்கங்களுடன் வண்ண மலராக வெளிவரவிருக்கின்றது. என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.**

- ஆசிரியர்.

பொதிகை ஜனவரி இதழில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது பாராட்டுதல்கள் முற்றிலும் சரியான விடையை அனுப்பி பரிசு பெறுபவர்.

**சி. சிவதாசன் ரொரன்ரோ**

மிகவும் குறைவான பிழைகளுடன் அனுப்பி, குலுக்கல் முறையில் 2வது, 3வது இடத்தை வகிப்பவர்கள்,

செல்வி.ஜி.கஜேஷவேனி - மொன்றியல்

செல்வி.ந.கலாமலர் - ஸ்காபரோ.

**சரியான விடைகள்.**

இ.வ 1.தொனி. 2. சோடி. 3. கைலை. 4. நகு. 5. கலை 6. நொதி. 7. முகை. 8. திரை. 9. கேடி. 10. விடை. 12. துறை. 13. துணி. 14.சிலை. 15. பொது. 16. ஏணை. 17. தோகை. 18. பேடி. 19.நடு. 20. கோல். 21 சேனை. 23. தேரை. 24. பேழை. 25. வேறு. 26. சாறு

மே.கீ. 1.தொல். 2. சோலை. 3. கைதி. 4. நகை. 5. கரை. 6. நொடி. 7. முடை. 8. திறை. 9. கேணி. 10. விலை. 11. மாது. 12. துரை. 13. துணை 14. சிகை. 15. பொடி. 16. ஏடு. 17. தோல். 18. பேனை. 19. நரை. 20. கோழை. 21. சேறு. 22. நீறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலிருந்து கீழ்.


1. இனக் கலவரங்களைத் தொடர்ந்து இலங்கையில் தமிழர் கட்கு ஏற்பட்ட பாதிப்புகளில் இதுவும் ஒன்று.
2. முடிவு அல்ல....... தொடக்கம்.
3. ஆடத்தெரியாதவன் ஏறக் கூடாதது.
4. பொம்மை.
5. வரிசை
6. இது நான்கு என்கிறது இந்து சமயம்.
7. எதையும் இதுவாக கருதினால் பாரம்தான்.
8. இதனால் வசமாகா இதயம் எது?
9. பலநாள் வாழ்பவர் இதனால் பாதிப்படையாதிருப்பவர்.
10. காய்ந்தால் இது சருகு!
11. இது வாய் திறந்தால் பஞ்சாங்கத்தைப் புரட்டுபவர்களும் இன்றும் இருக்கிறார்கள்.
12. ஆலோலம் பாடி வள்ளி காவல் புரிந்தது இதனை என்பது கந்த புராணம்.
13. இரவில் அதிகநேரம் விழித்திருப்பவர்களுக்கு இந்தப் பொழுது தெரியாமல் போவதும் உண்டு.
14. போற்றுவீர்களா? துதிப்பீர்களா?
15. நளாயினி தனது கணவனை சுமந்தது.
16. பூர்த்தி!
17. பயம், அகோரபயம்.
18. பொட்டலம்.
19. சூழலைப் பாதிப்பது.
20. ரகம்.
21. பெரியோரால் பாலுக்கும் சிறியோரால் நாலுக்கும் இடப்படுவது.
22. நிலைக்கண்ணாடி.

## இடமிருந்து வலம்

| | ஒ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | ரு | எ | ழு | த் | தி | ல் |
| | சொ | | | | | |
| | ல் | | | | | |

1. பாண்டவர் தோற்க இதுவும் காரணம்.
2. இது இல்லாத ஊருக்கு இலுப்பைபூ சர்க்கரை என்பது பழமொழி.
3. நீங்கள் ஏதாவதொன்றில் நிபுணரா? அப்ப சந்தேகமில்லாமல் இவர்தான்.
4. இறுதியாத்திரைக்கான இலவச வாகனம்.
5. குபேரனிடமிருந்தது குசேலரிடம் இல்லாதது.
6. தடுப்பு
7. நாக்கு இதனை நன்கு அறியவல்லது.
8. சில கால்நடைகளுக்கு இதை மீட்டும் சக்தியுண்டு.
9. மூன்றாம் நாளில் இதற்காக ஏங்குபவர் சிலர்.
10. தூக்கத்துக்காக மூடுவது. சிலவேளை துக்கத்துக்காகவும் மூடும்.
12. இதனை அறியும் கருவி எப்பவோ சீனரால் கண்டு பிடிக்கப்பட்டது.
13. பாரதியாருக்கு தேவைப்பட்டது. பராசக்தியிடம் கேட்டிருந்தாரே?
14. இதில் ஒன்றை புதிதாகத் தெரிவு செய்ய அதிக நேரமாகும் பெண்களுக்கு என்கிறார் அனுபவப்பட்ட வியாபாரி.
15. இதற்காக மாரடிப்பது போலி வேஷம்.
16. கம்பராமாயணமும், சிலப்பதிகாரமும் கைவைத்த பெண்ணின் ஒரு அங்கம்.
17. இறகு இல்லாத பறவை.
18. ஒரு மாதிரிச் சமாளி.
19. கனடாவில் இதனை எங்கும் காணலாம். ஆனால் யாழ்ப் பாணத்தில் கிடையாது.
20. இது என்றாலே வேதனைதான்.
21. பொருள்.
23. உலகமெங்கும் இவருடைய பிறந்தநாளுக்காக விடுமுறை உண்டு.
24. பல போர்களுக்கு மூல காரணம்.
25. பூரணம்.
26. மகிழ்ச்சியை குறிக்க உயர்ந்தும். சோகத்தைக் குறிக்க தாழ்ந்தும் இருப்பது.

| த | மி | ழு | ட | ன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சி | று | | | |
| | | | | வி | ளை | யா | ட் | டு |




எதையும் சற்று வித்தியாசமாகவே செய்தல் வேண்டும் என்ற விருப்பம்தான் இந்தப் பகுதி. விளையாட்டு என்றால் யாருக்குத்தான் பிடிக்காது? அதுவும் தமிழுடன் சிறுவிளையாட்டு எனின் அறிவுள்ள எவரையுமே கவரும். இந்தக் கட்டங்களை சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்து இந்தக் கட்டத்தை கத்தரித்து அனுப்ப வேண்டும். அதிஷ்டசாலிகள் மூவருக்கு பரிசுகள் உண்டு. "போதிகை"க்கு விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி திகதி

**14-03-1993.**

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

அனுப்ப வேண்டிய முகவரி :-

BOTHIKAI
203 MARKHAM ROAD.
P.O.Box 90527.
Scarborough.
ONTARIO. M1J - 3C3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஸ்ரீ விஜயலெட்சுமி வாசாவின்

# திருமண மண்டபம்



## WEDDING HALL

875 St. Clair Ave. west. TORONTO.

நவீன முறையில் மின் அலங்காரம், மண்டப சோடனை,
அலங்காரம் அழகான தரமான முறையில் அமைக்கப் பட்ட முத்து மணவறை,
நவீன வடிவமைப்பிலான கதிரை, மேசைகளுடன் வாகனம் நிறுத்தும் வசதி, மண்டபத்திலேயே சிறந்த
ருசிமிக்க சைவ உணவு அத்தனையும் ஒரே இடத்தில் அமையப் பெற்ற நான்கு அடுக்கு மாடி
மண்டபம், அத்துடன் பூமாலை , சடைநாகம் புத்தம் புதிய தலைப்பாகை, தலைநகை, பூஜைக்குரிய
பொருட்களையும் ஒரே இடத்தில்
என்றும் எப்போதும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா பூக்கடை

உங்கள் இல்லங்களில்
நடைபெறும் திருமண விழாக்கள்,
ருது சாந்தி மற்றும்
மங்களகரமான
வைபவங்களிற்கும்,
இறைவழிபாட்டிற்குத் தேவையான
மலர்கள், உங்கள்
விருப்பத்திற்கேற்ப பூமாலைகள்,
சடைநாகம், சரம் அனைத்திற்கும்
எம்மை நாடுங்கள்

ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா பூக்கடை
1247 Ellesemere Road, (Birkdale Plaza)
(Brimley/Midland)
Tel :- (416) 534-0011 or 750-7319

திருமணம், பதிவுத் திருமணம் உட்பட அனைத்து இந்து மத
கிரியைகளையும் வேதாகம விதிப்படி செய்து கொள்வதற்கும்
தொடர்பு கொள்ளுங்கள்

இந்து மதகுரு, கனேடிய திருமண பதிவதிகாரி
**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்**
(புங்குடுதீவு .- 10. இலங்கை)
**243 MARGUERETTA sT, TORONTO - ONT.**
**M6H 3S4, CANADA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN: 1192-6779




# சிவஸ்ரீ நிலையம்

சத்யஜோத சிவாச்சாரியார், "திருமுருக குருமணி"

(இந்துமத பீடாதிபதி, இலங்கை) (நல்லை ஆதீனம், யாழ்)

## சிவ ஸ்ரீ. தியாகராஜக் குருக்கள் (கணேஷ்சுவாமி)

(இந்து மதகுரு, சோதிடர், திருமண பதிவதிகாரி, கனடா)

தொலைபேசி எண்: **(416) 291-5042**

இந்து மத கிரியைகள் அனைத்தும் நடாத்தி வைப்பதுடன் இந்து மதத் திருமணத்துக்கு தேவையான மணவறை மண்டபம், மாலைகள், முதலான எல்லா ஒழுங்குகளும் எம்மால் நிறைவு செய்யப்படும். திருமணப் பொருத்தம் பார்க்கவும் விவாஹப் பதிவு செய்து கொள்வதற்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org